ஸ்ரீ
கடவுள்துணை.

# செந்தமிழ்

தொகுதி-கசு.] பிங்கள ௵ மார்கழி ௴ [பகுதி-உ.
Vol. XVI. December,—January. 1918. No. 2.

ஸ்ரீ:

## வஞ்சிமாநகராராய்ச்சி.

“செந்தமிழ்” (தொகுதி கசு - பகுதி க-ல்)

(ககூம்—பக்கத் தொடர்ச்சி.)

இனி எட்டாவது சான்றாக, சங்கநூல்கள் சேரரைக்கொங்கர் கோவென்று கூறியிருப்பதையும் விசாரிப்போம்.

சேரரைப்பற்றிப்பாடிய எத்துணையோ சங்கச்செய்யுள்களுள் ஒரு சில பாடல்களில்மட்டும் கொங்கர்கோவென்ற பிரயோகங்காணப் படுகிறது.

பிரகிருதவாதத்துக்கெல்லாம் பிரதானமான சேரன்செங்குட்டுவனையாவது, மற்றுமுள்ள பல சேரர்களையாவது சங்கநூல்கள் எங்கேனும் கொங்கர்கோவென்று கூறியதாகக்காணப்படவில்லை. சேரன் செங்குட்டுவனை நாடுங்குடியும்பற்றிச் சிறப்பிக்குமிடத்து “குடவர் கோமான் என்றும், குட்டுவர்பெருந்தகை என்றும் ‘சேரன்’, ‘பொறையன்’, ‘மலையன்’ என்றுமிவ்வாறாகச் சொல்லியிருப்பதல்லது கொங்கர்கோனென்றெங்குஞ்சொல்லவேயில்லை. இங்கு “மலையன்” என்றது கொங்குமண்டலத்தின் வேறாயெண்ணப்பட்ட மலைமண்டலமுடையானென்றேபொருள்படுகிறது. அன்றியும், “கடலொடுழந்தபனித்துறைப் பரதவன்” எனக் கொங்கின்சம்பந்தமேயில்லாத நெய்தனிலமே அவனது வாசஸ்தானமென்றும், சமுத்திரசஞ்சாரமே அவனுடைய விருத்தியென்றும் வற்புறுத்திச்சொல்லப்பட்டிருக்கிறது.

பதிற்றுப்பத்திற்சொல்லப்பட்ட "நாரறிநறவிற்கொங்கர்கோவே" "கட்டிப்புழுக்கிற்கொங்கர்கோவே" என்ற இரண்டுபிரயோகங்களும் இளஞ்சேரலிரும்பொறை என்னும் ஒரு சேரனையே குறித்துள்ளன. அவையும் தென்னுடன் குடகொங்கன் என ஆழ்வார் சோழனை வழங்கியதுபோல இளஞ்சேரலிரும்பொறை கொங்குநாட்டைவென்று கொண்டதுபற்றி அந்நாட்டானே அவனைக் கொங்கர்கோவெனப் பெருங்குன்றூர்கிழார்பாடினரெனக்கொள்வது பொருத்தமுடையதாயிருக்கிறது. அல்லது கொங்கிளங்கோசர் சேரமண்டலத்தரசர்க்கடங்கிய சிற்றரசராதலால் அங்ஙனங்கூறினரெனினுமமையும். அல்லாக்கால் "காவிரிமண்டிய.........புகார்ச்செல்வ" என்றதுபற்றிச் சோழமண்டலமும் சேரர்க்குரியதென்றுசொல்வாரை மறுக்க வழியின்றாம்.

அன்றியும், கொங்கர்கோவென்பதில் கொங்கர் என்பதற்கு, கொங்குநாட்டுள்ள குடிகளும் கொங்குநாட்டரசரும் பொருளாமாயினும் 'குடகக்கொங்கர்' 'கொங்கரையட்டகளத்து' 'கொங்கிளங்கோசர்' என்புழியெல்லாம் 'கொங்கர்' என்பது கொங்குநாட்டரசரையேகுறிப்பதால், இங்கும் புகழ்பொருளாகிய சேரனை ராஜாதிராஜனென்று சிறப்பிக்குங்கருத்துடைய புலவர்கூற்றிலுள்ள கொங்கர்கோவென்றதற்குக் கொங்குநாட்டரசர்க்கரசாகியகோவென்றே பொருள்கொள்ளவேண்டும். கொள்ளவே கொங்குநாடு சேரமண்டலத்தினின்றும் வேறென்றும், அதனையாளுமரசர் வெவ்வேறு பலருளரென்றும், அவர்க்கெல்லாம் சேரன் பேரரசனென்றும் தெளிவாகின்றது. இதனாற் சேரர்க்குத் திறையிடுதற்குரிய சிற்றரசராட்சிக்குட்பட்ட கொங்குநாடானது, திறைகொள்ளும் பேரரசராகிய சேரரது பிரதானராஜதானிநகரமுள்ள குடபுலமாகமாட்டாதென்பது நன்கு தெளியத்தகும்.

ஆதலாற் சேரரிலிரண்டொருவரைக் கொங்கர்கோவென்று சங்கநூல் கூறியதுகொண்டு அவரைக்கொங்குநாட்டுள்ளவரென்று சொல்வதானது "குடகொங்கன் சோழன்" என்ற திவ்யசூக்தியைக்கொண்டு சோழன் குடகொங்குநாட்டுள்ளவனென்று சொல்லுவதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக. ஆகவே சிலசேரரைச் சங்கநூல்கள் கொங்கர்கோவென்றுகூறிய பிரயோகமும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

இனி ஒன்பதாவது சான்றான சிலப்பதிகார அபிதானவிளக்கத்தையும் விசாரிப்பாம். அங்குள்ளவாக்கியம், 'கொங்கு=கொங்குமண்டலம்-

குடநாடு." என்று எழுதப்பட்டிருக்கிறது. இதில் குடநாடென்றது சேரமண்டலவாசகமாகுமென்றும், அதனால் அக்கொங்கு குடபுலமாகிய சேரமண்டலமென்று சித்திக்கிறதென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இங்குப்பொருளுரைத்தற் கெடுத்துக்கொண்டபெயர் சிலப்பதிகாரத்து வழங்கும் மண்டலவாசகமாகிய கொங்கு என்னும் பெயராம். அதற்கு, கொங்குமண்டலம்—குடநாடு. என இரண்டு சொற்களாற் பொருளெழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டுசொற்களும் வெவ்வேறு இரண்டுபொருளைக் குறித்தனவா? அல்லது ஒரே பொருள் குறித்துள்ளனவா? என்றகேள்விக்கு வஞ்சிமாநகருடையார் விடைகூறவேண்டும். வெவ்வேறுபொருள் குறித்தனவென்பாராயின், கொங்குமண்டலம் வேறு; தாம் குடபுலமென நினைத்த குடநாடுவேறு என்பதே பெறப்பட்டுத் தமக்கிஷ்டசித்தியில்லாமல் அநிஷ்டசித்தியே யுண்டாவதாயிருக்கிறது. ஆகையால் அவ்விரண்டும் வெவ்வேறென்று கொள்ளாது ஒன்றென்றே அவர்கொண்டுதீரவேண்டும். கொள்ளவே, ஒருபொருளுக்கு இரண்டுசொல்லெழுதவேண்டுவ தெதற்கென்று யோசிக்கவேண்டும். விளங்குதற்பொருட்டு வெளிப்படையான சொல்லாலும் பொருளெழுதப்பட்டதென்பாராயின், அச்சொல் முன்னுள்ள கொங்குமண்டலமா? பின்னுள்ள குடநாடா?. கொங்குமண்டலமாயின் அதனையிறுதியிலெழுதியிருக்கவேண்டுமே? அங்ஙனமில்லாமையாலது பொருந்தாது. குடநாடென்பதோ கொங்குமண்டலமென்பதைக்காட்டிலும் வெளிப்படையன்றென்பதிலக்கணநூல் வல்லாரெல்லாருமறிவர். ஆதலால் குடநாடென்று வெளிப்படைச்சொல்லாற் பொருள்விளக்கப்பட்டதென்று கொள்ளுதல் பொருந்தாதிருக்கிறது.

அன்றியும் அது வெளிப்படைச்சொல்லென்பது கருத்தாயின் கொங்குமண்டலமென்பது கூறாமலே கொங்கு - குடநாடு என்று எளிதில் விளங்குமாறு பொருளெழுதியிருக்கலாமே? அவ்வாறெழுதாது இடையே கொங்குமண்டலமும் எழுதப்பட்டிருத்தலால், ஸ்ரீ. மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கட்குக் கொங்குகுடபுலமாமென்பது கருத்தன்றென்றுணர்க. பின்னையாதெனின்? கொங்கு என்ற சொல்லுக்குப்பொருள் கொங்குமண்டலமேயாம்; ஆயினும், சிலப்பதிகாரத்துட் சொல்லிய கொங்கிளங்கோசர் குடகக்கொங்கராதலால் அவர்க்குரிய நாடு அக்கொங்குமண்டலத்தின் குடநாடேயாம் என்னுங்கருத்தை

வெளியிடவேண்டி, கொங்கு=கொங்குமண்டலம்-என்று சொற்பொருளெழுதி இங்கு அதன் குடநாடே பொருளாகக்கொள்க என்னுங் குறிப்பால் அதனையடுத்துக் குடநாடு என்றெழுதியுள்ளார்கள். இஃது என்போலவெனில்? 'பொருப்பிலேபிறந்து' என்ற தமிழ்மொழி வாழ்த்துச்செய்யுளிற் பொருப்பு என்றதன் குறிப்பெழுதுமொருவர் பொருப்பு=மலை-பொதியில். என்றெழுதுவதுபோலுமெனவறிக. இதனுள் பொருப்பு என்பதற்கு மலை என்பதே நேர்பொருளாயினும் அது இங்கு அம்மலைகளுட்பொதியின்மலையையே குறிக்கும் எனக் கொள்வதுபோல, கொங்கு என்பதற்கு, கொங்குமண்டலம் என்பதே நேர்பொருளாயினும் அது இங்கு அக்கொங்கினுட்குடநாட்டையே குறிக்கும் எனக் கொள்வதற்கே செவ்வேயியைந்து பிறிதோராற்றானும் பொருள்கொள்ளற்கிசையாதிருத்தல்காண்க.

ஆதலாற் "கொங்கு=கொங்குமண்டலம்-குடநாடு" என்ற சிலப்பதிகாரவபிதானவிளக்கமும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிற்று.

இனிப் பத்தாவது சான்றாக, "செங்கதிர்மணிமுடிச்சேரலன்றிகழ், கொங்குநன்னாடு" என்ற பழனிப்புராணப்பிரயோகத்தையும் விசாரிப்போம்.

இதுவும், "சேரர்கொங்கின்வைகாவூர்நன்னாடு" என்ற அருணகிரியார்வாக்குப்போலக் குடகொங்கினையே சேரர்க்குரியதாகக்காட்டுவதல்லது பிரகிருதவாதத்துக்கு முக்கியமாயுள்ள கருவூர்ப்பகுதியைச் சேரர்க்குரியதாகக்காட்டமாட்டாததாயிருக்கிறது.

அன்றியும் சேரர்க்குக் கொங்குநாடுள்ளது என்று பேசுவதற்கெல்லாம் மூலகாரணமாகக் "கொங்கனென்னிள்ளுங் கோதைநனியாண்ட" தெனப் பேரூர்ப்புராணஞ்சொல்லியதும் அப்பேரூர்ப்பாகமுள்ள குடகொங்கேயாயிருக்கிறது. இக்குடகொங்கு சேரகுலத்தினராகிய சிற்றரசராலாளப்பட்டுவந்த குடியேற்றநாடென்பதில் எதிர்வாதகக்ஷிக்கு ஆக்ஷேபமில்லாமையானும், கருவூர்ப்பக்கத்தைச் சேரராண்டதாக இப்பிரமாணங்காட்டமாட்டாமையானும் இதுவும் வாதகக்ஷிக்குச்சாதகமாகாதிருக்கிறது. இவ்வாறே, "சேரர்திருநாட்டூர்களின்

முன்சிறந்தழூதூர்செங்குன்றூர்" என்ற பெரியபுராணவாக்கியமும் ஆராயத்தக்கது. இங்கு கொங்கிற்செங்குன்றூருள்ளபாகம் குடகொங்காதலால் அது தொன்றுதொட்டுச் சேரர்குலத்துச் சிற்றரசராகிய குடகக்கொங்கராலாளப்பட்டதென்பது எதிர்வாதகக்ஷியாராலங்கீகரிக்கப்பட்டமையா லிது அவர்க்கு விரோதமில்லதாயிற்று. ஆகவே இது குடகொங்கிற் சரிதார்த்தமுடையதாய், சாவகாசமாயிருப்பதால் வாதகக்ஷிக்குக் கருவூருள்ளகொங்கின்பாகத்தைச் சேரனுடைன்று காட்டமாட்டாமையாலும், அச்சேக்கிழார்வாக்கினுலேயே "மன்னியவனபாயன்சீர்மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூரென்னுஞ் சுடர்மணிவீதிமூதூர்" என்று வியக்தமாய்க்கருவூர் சோழர்க்குரியதென்று சொல்லியிருக்கும் நிரவகாசவாக்கியத்தாற் பாதிக்கப்படுவதனுலும் இது வாதகக்ஷிக்குச் சாதகமின்றியும் எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமின்றியும் உதாசீனமாயிருக்கிறது.

ஆனுல் கருவூரைச்சோழர்க்குரியதாகச் சேக்கிழார் கூறியிருப்பதற்கு அர்த்தாந்தரகற்பனத்தால் அசித்திசொல்லவருகிறூர். அது பொருந்தாதென்பதைப் பின்பு எதிர்வாதகக்ஷியில் அப்பாட்டுக்குப் பொருளாராய்வுழிக்காட்டப்படும்.

இனிப் பதினோராவதுசான்றூக, "கொடித்தடஞ்சிலைக் கோதைநாட்டினிலெழுபதியும்" என்ற பழனிப்புராணவாக்கியத்தையும் விசாரிப்பாம்.

இதிற் கொடித்தடஞ்சிலைக்கோதைநாட்டினிலெழுபதியும் என்பதிற் கருவூருஞ்சேர்ந்ததுதானென்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. அது சேரர்க்குரியதென்பது குறிப்பாற்கொள்ளவேண்டியிருக்கிறது. கருவூர் சோழர்க்குரியதென்பது 'தங்கள்குலமரபின்முதற்றனிநகராங்கருவூர்' என்றும், 'மன்னியவனபாயன்சீர்மரபின்மாநகரமாகுந், தொன்னெடுங்கருவூர்' என்றும் பெரியபுராணத்துட்டெளிவாகச்சொல்லப்பட்டிருப்பதுகொண்டு எதிர்வாதகக்ஷியால் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வெளிப்படையுங்குறிப்புமாகியவிரண்டுபொருள்கண்மாறுபட்டால் வெளிப்படைப்பொருளே வெற்றியடையும் என்ற நியாயத்தால் எழுபதியும் என்றதனுட் கருவூர் ஒன்றென்றுகொள்ளற்கிடமில்லாமையால் அவை கருவூரொழிந்த வேறேழுபதிகளாயிருக்கவேண்டுமென்பதே பெறப்படுகிறது.

அவ்வேழுபதிகளுட் 'கருவூர் ஒன்றென்று நிரூபிக்கப்பட்டாலும் அது வாதகக்ஷியார்க்குச் சாதகமாகிறதில்லை. ஏனென்றால், அது சோழ ரதுநகரமென்று பெரியபுராணத்தாலும் கருவூர்ப்புராணத்தாலும் கருவூர்ச்சிலாசாசனங்களாலும் சித்தித்திருப்பதற்கு விரோதமில்லாமலே கோதைநாட்டுப் பதிகளுளொன்றாகக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது. குடகொங்குநாடே சேரர்கொங்கு எனப் பேரூர்ப்புராணமுதலியவற்றாற் சித்தித்திருக்கிறது. அதனையாளும் சேரர்குலச்சிற்றரசர்களாகிய கொங்கர்கள் ராஜ்யகாரியசௌகரியார்த்தம் சேரவரசர்மூல' மாகச் சோழர்கொங்கினையும் வருடவாரித்திறைப்பொருள்கொடுத்து வருவதாகச்சேர்த்துக்கொண்டு ஒரு தனிமண்டலமாக்கிக்கொண்டு ஆண்டுவந்தமையால் அச்சோழர்க்குரிய கருவூர்ப்பாகமும் கொங்கு நாடென்று பெயர்பெற்றதாயிருக்கவேண்டுமென்று 'தோன்றுகிறது. இதனை, "கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணர" என்ற பாட்டின் குறிப்பாலும், கருவூர்ச்சிலாசாசனக்குறிப்புகளாலும், பின்பு காட்டுதலாலறியலாம்.

ஆகவே கொங்குமண்டலம் மலைமண்டலக்கோமன்னர் மேற்பார்வையிற் கொங்கரென்னுஞ் சேரவகுப்பினராகிய சிற்றரசராற் பிற்காலத்திலாளப்பட்டுவந்ததுபற்றியே, கோதைநாட்டினிலெழுபதியும் என்று கருவூரையுமகப்படப் பிற்காலத்தலபுராணமுதலியவற்றிற் கூறியதாகக் கொள்ளவேண்டுமேயல்லது சோழர்க்குரியதாகாத கோதைநாட்டுள்ளதாகக்கொள்ளற்கிடமில்லாமையா லிது வாதகக்ஷிக்குச் சாதகமில்லாததாகவும் எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமில்லாததாகவுமிருக்கிறது. "சேரர் திருநாட்டூர்களின்முன்சிறந்தமூதூர்செங்குன்றூர்" என்றபெரியபுராண வாக்கியத்துக்கும், கருவூர்ப்புராணம் எறிபத்தச்சருக்கத்துள் வஞ்சுளாடவி சேரனாட்டுள்ளதெனக்கூறியிருப்பதற்கும் இதுவே சமாதானமாமெனவறிக.

இனி, பன்னிரண்டாவதுசான்றாக "வெங்கைக்களவழிப்பாட்டுக்காவில்லவனைக்கோங்கைத் தளைகளைந்தகோமானும்" என்ற சங்கர சோழனுலாவாக்கியத்தையுமாராய்வாம்.

இதன்கண் வில்லவனைக்கொங்கைத்தளைகளைந்தகோமான் என்பதற்கு வில்லவனானசேரனைச் சோழன்தளைகளைந்தது அவனுடைய

கொங்குநாட்டைத்தலைகளைந்ததென்பதே கருத்தாகுமென்கிறார். இது பொருந்துவதாயில்லை. ஏனெனில் இத்தலைகளையப்பாடிய களவழிப் பாட்டில் "வஞ்சிக்கோவட்டகளத்து" "கொங்கரையட்டகளத்து" என வில்லவனும், கொங்கருமாகிய இருவேறுவேந்தரையும் சோழன் போரில்வென்றானென்று கூறியிருப்பதாலங்ஙனம்வென்று தலையிடப் பட்டவில்லவனையுங் கொங்கரையும் தலைகளைந்தகோமான் எனச் சோழனைச்சொல்வது சரித்திரத்தோடு பொருத்தமுடையதாயிருக் கிறது. கொங்குநாடு ஒருவாற்றானும் சோழனாற்றலையிடுதற்குரிய தாகாமையானும், அவனாற்றலையிடப்பட்ட கொங்குநாட்டரசரே தலை களைதற்குரியராதலானும் வில்லவனைத்தலைகளைந்தது கொங்குநாட் டைத்தலைகளைந்ததாகக் கூறுவது பொருளாகாதெனவறிக.

ஆகவே வில்லவனைக்கொங்கைத்தலைகளைந்தகோமான் என்றதில் வில்லவன் குடபுலத்தரசனும், கொங்கர் அவனுக்குத்துணைப்படை யான கொங்குமண்டலத்தரசருமாகிய வேறுபாட்டையேகாட்டுதலால் இதுவும் கொங்கு குடபுலமாகாதென்பதற்கேயாதாரவாகி வாதகக்ஷிக் குப்பாதகமாயும் எதிர்வாதகக்ஷிக்குச்சாதகமாயும் உண்மையை வெளி யிடுவதாயிருக்கிறது.

இனி, பதின்மூன்றாவதுசான்றான "கொங்கைக்கமராவதியளித்த கோ" என்ற தனிச்செய்யுட்பிரயோகத்தையும் விசாரிப்பாம்.

இதில் "கொங்கைக்கமராவதியளித்தகோ" என்பதற்குக்கொங்கு தேசத்தரசனாகியசேரனைப் போரிற்கொன்றவன் சோழன், என்பதே பொருளெனக்கொண்டு குடபுலமன்னனாகிய சேரனுக்கு உரியதாகக் கொங்குநாடு கூறப்பட்டதனால் அது குடபுலமாகவேண்டுமென்று கருதுகிறார்.

இங்கு சோழனாற்கொல்லப்பட்டவன் குடபுலத்தரசனாகிய சேரன் என்று விளக்கமாகச்சொல்லப்படாமையானும், சிலப்பதிகாரகாலத் துக்கு மிகப்பிற்பட்டவிருத்தாந்தத்தைத் துதிமுகமாகக்கூறுதலானும் "கொங்கர்க்கமராவதியளித்தகோ" வென்றும் வேறு பாடபேத மிருப்பதானும், கொங்கை யென்பதற்குச் சேரன் என்றே பொருள் சொல்லவேண்டுமென்ற நியமமில்லாமையானும், கொங்கர் என்ப

தற்குக் கொங்குநாட்டுக்குறுநிலமன்னர் என்ற பொருள் பலவிடத்துங் கொள்ளப்பட்டிருத்தலாலும், கலிங்கரைவென்றான் என்பதுபோலக் கொங்கரைவென்றான் என்பதும் சம்பாவிதமாகையாலும் இது வாத கக்ஷிக்குச்சாதகமாகவாவது, எதிர்வாதகக்ஷிக்குப் பாதகமாகவாவது காணப்படாமையா லுதாசீனிக்கத்தக்கதே.

இனி, பதினான்காவது சான்றாக "மாந்தரக்கொங்கேனாதி" என இலக்கணநூல்களில் உதாரணமாகக்காட்டும் தொடர்மொழிப்பிரயோகத்தைத் தமக்காதரவாகக்காட்டுகிறார். அதனையும் ஆராய்வாம்.

இதில் மாந்தரன் என்ற பெயர் குடபுலமன்னனாகிய சேரனுக் குரியதென்றும், அப்பெயரிற் கொங்கின்சம்பந்தமிருப்பதால் கொங்கு குடபுலமாகுமென்றும் வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். இதனாற் கொங்குநாடு சேரமண்டலமென்று சாதிப்பதானது "மலையமான் சோழியவேனாதிதிருக்கண்ணன்"என்பதில் * மலையமானென்ற சேரர்க் குரியபெயரிற் சோழசம்பந்தமிருப்பதாற் சோழநாடு மலைமண்டலமாகு மென்று சாதிப்பதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனிப் பதினைந்தாவது சான்றாக, "வஞ்சிகுடக்கினிற்கோதையு மாங்கே" என்ற அழகர்கலம்பக வாக்கியக்குறிப்புமுதலிய சில குறிப் புக்களைத் தமக்காதரவாகக்காட்டுகிறார், அவற்றையும் விசாரிப்பாம்.

இவ்வழகர்கலம்பகத்திற்சொல்லிய வஞ்சியுங்குடக்கும் முறையே கொங்கிற்கருவூரையுங்கொங்குமண்டலத்தையுமேயுணர்த்துஞ்சொற்க ளென்று தெளிவுபிறந்தாலல்லது இவ்வாக்கியம் வாதகக்ஷிக்காதரவாக மாட்டாது. ஏனெனில், வஞ்சி என்னும் சேரராஜதானிநகரம் மலை மண்டலத்துள்ளதோ? கொங்குமண்டலத்துள்ளதோ? என்று விசாரித் துக்கொண்டிருக்குநிலையில் அதுவே சந்தேகத்துக்கிடமாயிருப்பது முதலாவதுதோஷம். குடக்கு என்ற சொல்லுக்கு முக்கியார்த்தம் மேற்றிசையாதலால் அதனையொழித்துக் குடபுலமென்றலக்ஷ்யார்த் தங்கொள்வது இரண்டாவதுதோஷம். அது சேரமண்டலவாசகமாக வழங்கப்படாமை மூன்றாவதுதோஷம். இம்மூன்றுதோஷங்களானும் முறையே இது அசித்தியுடையதாகுமெனவறிக.

---

* புறநானூற்றின் 174-ம் பாட்டாற்பாடப்பெற்றவன்.

அன்றியும், இவ்வாக்கியம் மகண்மறுத்தலென்னும் மறக்காஞ்சித்துறையில் அழகர்மலையிலுள்ள மறவர்கூற்றாகக்கூறினமையால், அவ்வஞ்சி அழகர்மலையிலிருந்துசொல்வார்க்குக் குடக்கு என்னும் சொல்லுக்கு நேர்பொருளாகிய மேற்றிசைநோக்கி "வையையொரு வழிக்கொண்டு மாமலைமிமிசையேறிச்" செல்லற்குரிய வஞ்சியென்று பொருள்படுமேயல்லது, அவர்க்கு வடதிசைக்கண்ணுள்ள கொங்கு வஞ்சி என்று பொருளாகாதெனவறிக. கொங்குவஞ்சியைக்கருதி, அழகர்மலையிலிருந்து கூறுங்குறவர்கூற்றின் அனுகாரமாகக்கூறியிருந்தால் அது, வஞ்சிவடக்கினிற்கோதையுமாங்கே, என மோனைத்தொடைநயமுமுடையதாய்க்கூறப்படுமெனவறிக. அங்ஙனங்கூறாமையாலிங்குக்கூறியவஞ்சி கொங்குவஞ்சியாகாதெனத்தெளியத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் இதுவும் வாதககூழிக்குப்பாதகமாகி எதிர்வாதககூழிக்கே சாதகமாயிற்று.

இனி "குடகிற்கருவூர்" என்ற அருணகிரியார்வாக்கைத் தமக்காதாரமாகக்காட்டுகிறார். இதில், குடகென்றது குடபுலம் என்ற சேரமண்டலப்பொருள்கருதி வழங்கியிருப்பதாக வஞ்சிமாநகருடையார் கருதுகிறார். குடகு என்பதற்கு, சேரமண்டலமே பொருளாக வேண்டுமென்றாவது அல்லது கருவூர்க்குப்பொருத்தமான பிறிதொரு பொருளுமில்லையென்றாவது அவர் காட்டவேண்டும். அங்ஙனமன்றி, குடகு என்றசொல்லுக்குச் சேரமண்டலமென்று பொருள்சொல்லி விடுவது சாத்தியமாகாதிருக்கிறது. ஏனெனில், சேரனைக்குடபுலமுடையானென்று கூறுமிடத்தெல்லாம் குடக்கோ, குடவர்கோ, குடவர் கோமான் எனவே கூறியிருப்பதல்லது குடகுக்கோவென்றேனும், குடகர்கோவென்றேனும், குடகர்கோமானென்றேனும், குடகென்னும் குற்றியலுகரவீற்றுத் திசைப்பெயரடியாகக்கூறும் வழக்கில்லாமையாலும் குடகக்கொங்கர் எனச் சாதாரணத்திசைப்பொருளேபற்றிவழங்கும் வழக்கேயுண்மையானும், குடசத்தமொழிந்த குடகு குடகமென்னுந்திசைப் பெயர்கள் சேரமண்டலவாசகமாகாவெனவுணர்க. குடகென்பதற்கு,மேல்பால் என்பதே செம்பொருளாயிருப்பதால் "குடகிற் கருவூரழகப்பெருமாள்" என்பதற்கு, கருவூரின்மேல்திசையிலிருந்தருள் புரியுமுருகப்பெருமாள் என்று பொருள்சொல்லுதலே பொருத்த

முடையதாயிருக்கிறது. அவ்வூரில் அவர் எழுந்தருளியிருக்குமிடமு மதுவேயாம். ஆதலால் இதுவும் வாதககூஷிக்குச்சாதகமாகாதாயிற்று. இனி நைடதத்து,

"மாழைமென்னோக்கியிங்குவைகியமானவேலான்
றாழைமுப்புடைக்காய்வீழ்ந்ததாற்றிளங்கமுகுசெற்று
வீழ்சுளைவருக்கைபோழ்ந்துவெம்புலியடியபைங்காய்க்
கோழரையரம்பைசாய்க்குங்குடகநாடாளும்வேந்தே".

என்ற பாட்டிலும், அரிச்சந்திரசரிதையில்,

"அதிபாரதனபாரவநிரூபமலர்மானையனையாயிவ
னதிபாயவுயர்போதினறைபாயநிறைபாயசிறைவாவியின்
மதியாமல்வலைபீறிவெடிபோனபருவாளைவனைபூகமேற்
குதிபாயமடல்கீறிவிழுதேறல்கரைசாடுகுடநாடனே".

என்றபாட்டிலும், சேரர்க்குரிய மண்டலவாசகமாகச்சொல்லப்பட்டுள்ள குடகநாடு குடநாடு என்பன கொங்குநாட்டையேகுறிக்குமென்றும், அதற்கு இப்பாட்டுகளில் மருதவருணனையே கூறியிருப்பது சான்றென்றுங்கூறுகிறார். மலைநாடு பெரும்பாகம் குறிஞ்சிநிலமும், சிறுபாகம் மருதநிலமுமுள்ளதென்பதும், கொங்குநாடு பெரும்பாகம் முல்லைநிலமும், சிறுபாகம் மருதநிலமும் உடையதென்பதும் யாரு மறிவர். அங்ஙனமாகவும் கொங்குநாட்டின் பெரும்பான்மையான முல்லைநிலவளங்கொண்டு அதனை விசேடியாது சிறுபான்மையான மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பது பொருந்துமாயின், அவ்வாறே மலைமண்டலத்துள்ள பெரும்பான்மையான குறிஞ்சிநிலவளங் கொண்டு விசேடியாது மருதநிலவளங்கொண்டு விசேடித்திருப்பதும் பொருந்துமெனவறிக.

அன்றியும், "குடகநாடாளும்வேந்தன்" "குடநாடன்" என்ற பிரயோகங்கள் மலைமண்டலமுங்கூடிய கொங்குமண்டலத்தையுடையானைக்குறித்தனவாகவே வஞ்சிமாநகருடையார்கொள்ளவேண்டுமாதலால் அவ்விரண்டுமண்டலத்தும் மிக்குள்ளனவாகத்தாமொப்புக்கொண்டிருக்கும் குறிஞ்சிநிலவளம்பற்றிக் குடநாட்டை விசேடியாதகுற்றம் வாதககூஷிக்கும் ஒத்ததாயிருப்பதால் அவர்க்கவை சாதகமாகாவாயின.

அன்றியும், காவியப்பிரயோகங்களெல்லாம் சந்தர்ப்பானுகுண மாகச் சுவைநலந்தோன்றச்சொல்லுவதேமரபாயிருக்கிறது. மேற்காட்டிய செய்யுளிரண்டும் கொங்குமண்டலத்தரசரைக்குறியாது மலைமண்டலத்தரசரையே குறிக்குமிடத்தும் சுயம்வரமண்டபத்திடைவந்துள்ள மணவாளரை வாசயோக்கியமான அவர்க்குரிய நிலவளமுடைய மருதம்பற்றி விசேடியாது, கல்லுங்கரடும், முள்ளும்முரடும், முழையும், விடரும், அரவும், புலியும், களிறும் பலவுமுடைய குறிஞ்சி நிலம்பற்றிவிசேடிப்பது மணமக்களைநோக்கி இன்பச்சுவைதோன்றக் கூறும் மகளிர்கூற்றுக்குச் சிறவாதாதலானும், நீர்வளமிக்க மலைமண்டலத்துள் மருதநிலமில்லையென்று சொல்லவொண்ணுதாதலானும், நைடதத்தும், அரிச்சந்திரசரிதையினுங்கூறிய குடகநாடு, குடநாடு என்ற பிரயோகங்கள் மலைமண்டலத்துக்குப் பொருந்தாதென்பது தவறுமெனவறிக.

இனிப் பதினூருவதுசான்ருக, சேரநாட்டுள்ளனவென நூல்களிற் சொல்லப்பட்ட ஊர்ப்பெயர்முதலியன கொங்குநாட்டுள்ளனவாக வழக்குப்பற்றிக்காட்டும் சில குறிப்புக்களையும் விசாரிப்பாம்.

1. சேரகுலத்தவனன அதிகனுக்கும், சேரர்க்கும் பகைமையுண்டென்றும், ஆமூரிலிருந்த கொடுமுடியென்பவன் அதியமானெடுமானஞ்சியுடன்சேர்ந்து சேரரை விரோதித்தவனென்றும், ஆமூர் இப்பொழுது கொங்குநாட்டுள்ளதாதலால் சேரரிருந்தது கொங்குநாடாகுமென்றுஞ்சொல்லுகிருர். (வஞ்சிமாநகர்- பக்கம். 150.)

இதனுட்சொல்லும் அதிகன் சிற்றரசனும், சேரர் பேரரசருமாயிருத்தலால் பேரரசரைப்பகைக்கும் ஒரு சிற்றரசன் அப்பேரரசரது நாட்டுளிருத்தற்கியலாது புறநாட்டிலிருந்து விரோதிக்கவேண்டுமென்பதே யுக்திக்குப்பொருந்துவதாலும், அவ்வதிகனுக்குக் கிழக்கேயுள்ள ஆமூரிலிருந்து கொடுமுடி துணைச்செய்ததாகச்சொல்லுவதால், அவ்விருவரும் தமக்கு மேற்கே குடபுலத்துள்ள சேரரைப்பகைத்தாரென்று கருதுதற்கிடங்கொடுப்பதாலும் இதுவும் அசித்தியுடையதாயிருக்கிறது.

2. இனிச் சங்கச்செய்யுளொன்றில் வண்டன் என்னுமொருவன் சேரனுக்கு உவமிக்கப்பட்டுள்ளான் என்றும், அவன்பெயருடைய

வண்டமலை கொங்குநாட்டுள்ளதென்றும், அதனால் அக்கொங்குநாடு சேரர்குடபுலமாகவேண்டுமென்றுங்கருதுகிறார். (வஞ்சி-ர். பக். 151.)

இதனாற் கொங்கு குடபுலமாகுமென்று சாதிப்பதானது, குருகுலத்தரசருளொருவன் அத்தியென்னும்பெயருடையவனாயிருந்தமையால் தொண்டைநாட்டுள் அத்திகிரி என்னும் க்ஷேத்திரமிருப்பதால் அத்தொண்டைநாடு குருகுலத்தரசர்க்குரிய குருக்ஷேத்திரமாகும் என்று சாதிப்பதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

3. வஞ்சியிலிருந்த சிக்கற்பள்ளித்துஞ்சியசெல்வக்கடுங்கோ கோதானஞ்செய்தவனென்பது, 387-ம் புறப்பாட்டால் அறியப்படுகிறதென்றும், கொங்குநாட்டிற் பசுமிகுதியாதலா லவனங்கிருந்து தானஞ்செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலாலது குடபுலமாயிருக்கவேண்டுமென்றும் கருதுகிறார். (வஞ்சி-ர். பக். 152.)

இது, கொங்குநாட்டைக்காட்டிலும் பசுமிகுதி கோவர்த்தனத்திலிருந்ததாக அறியப்படுதலா லவனங்கிருந்து கோதானஞ்செய்திருக்கலாமென்றும், அதனாற் கோவர்த்தனகிரியே குடபுலமாகுமென்றும் துணிவதுபோலும் என்க. அன்றியும், செங்குட்டுவன் வடநாட்டிலிருந்து தன்னாட்டுக்கு "இன்பலருவிக்கங்கைமண்ணி, யினந்தெரி பல்லான்கன்றொடுகொண்டு" வந்தவனென்றுசொல்லப்பட்டமையால் பசுமிகுதியுள்ள கொங்குநாட்டுள்ளவனல்லனென்று விளங்குதலாலும் கொங்குகுடபுலமாகாதெனவறிக.

4. உதியஞ்சேரல் குழுமூரிலிருந்து பெருஞ்சோறுபயந்தவனென்று சொல்லப்படுதலா லக்குழுமூர் கொங்குநாட்டிலுள்ள குழுமம் என்னும் ஊராயிருக்கலாமென்றும், அதனாற் கொங்கு குடபுலமாகலாமென்றும் சொல்லுகிறார். (வஞ்சி-ர். பக். 151.)

இது தஞ்சைவாணன்கோவைப்பாட்டுடைத்தலைவனது மாறனாட்டூர் தஞ்சையென்றுசொல்லப்பட்டமையால் தஞ்சாவூருள்ள சோழநாடே மாறனாடாகுமென்றுசொல்வதுபோலுமென்க.

5. ஆதன் என்னும்பெயர் சேரர்க்கு உள்ளது; ஆதனூரென்பது கொங்குநாட்டுள்ளது. ஆதலாற் கொங்கு சேரராஜதானிநகர

முள்ள குடபுலமாகுமென்கிறார். இது சோழர் என்றபெயர் குண புலத்தரசர்க்குரியது; சோழபுரம் என்னும் ஊர் ஒன்று பாண்டிநாட்டி லிருக்கிறது; அவ்வூருள்ள பாண்டிநாடு சோழமண்டலமாகுமென்று துணிவதுபோலும் என்க.

இனி, இப்பெயர்களேயன்றி இவ்விவகாரங்களுக்கெல்லாம் காரண மாய்க் குடபுலத்துப்பிரஸித்திபெற்றுள்ள இடப்பெயர்ப்பொருளுடை மையைக்கொண்டு கொங்குகுடபுலமாகுமென்று சாதிக்கவும்வரலாம். அதாவது கருவூர், வஞ்சி, பொருநை, கொல்லி என்னும் ஊரும் நதியும் மலையுமிருப்பதனுற் கொங்கு குடபுலமாகுமென்று துணியவர லாமென்பதாம். இங்கு அப்பெயர்களையுடைய இடவிசேடங்களே இவ்வழக்கிற்குக்காரணமாயிருத்தலா லவற்றாலாயினும் கொங்கு குட புலமாகுமாவென்று விசாரிப்போம்.

அவற்றுள், "திருமாவியனகர்க்கருவூர்" என்று கருவூர் சேரர்க் குரியதாகச்சொல்லப்பட்டிருப்பதால் கருவூருள்ளகொங்குகுடநாடாகு மெனில் அது, "மதுரைப்பிறந்தமாமாயன்" என மதுரையில் திருமா லவதரித்தான் என்று சொல்லப்பட்டிருப்பதால், மதுரையென்னும் பெயரையுடையதிருநகரம் பாண்டிநாட்டிலிருப்பதால் அப்பாண்டிய ராஜதானிநகரமாகிய மதுரையுள்ளவிடமே திருமாலவதரித்த யமுனை தீரமாகுமெனத்துணிதல்போ லநுமானப்போலியாமெனவறிக.

இவ்வாறே வஞ்சி, பொருநை, கொல்லி என்பனவும் தனித்தனி கொங்குநாட்டைக்குடபுலமென்று காட்டமாட்டாவெனவறிக.

இனிக் கருவூர், வஞ்சி என்னுமிரண்டுபெயர்களும் சேர்ந்திருப்பது கொண்டு இரண்டேதுக்கூட்டத்தாலது சேரருருள்ள குடபுலமென்று துணியலாமெனின், அதுவும் பிறழ்ச்சியுடையதேயாம். எப்படியென் றால் கரும்பறியாதானொருவன் அதற்கு வேழம், கழை என்னும் பெயர்களுண்டென்று தெரிந்துகொண்டு வேழம்பர் கழைக்கூத்தாடு மிடஞ்சென்று அவர் கழையிலேறிக்கூத்தாடுவதையும், அதனால் அவர்க்கு வேழம்பர் என்ற பெயர்வந்திருப்பதையுங்கொண்டு வேழம் கழையென்னுமிரண்டுபெயரும் ஒருங்கு மூங்கிற்கு வழங்கப்படுவது

கண்டு, அக்கழைக்கூத்தாடுமூங்கிலைக் கரும்பாகுமென்றுதுணிதல்போ லும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி "தண்பொருநைப்புனல்பாயும் விண்பொருபுகழ்விறல்வஞ்சி" எனப்பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும்பெயருடைமையுமாகிய இவ்விரண்டையுங்கொண்டு இவ்விரண்டையுமுடையநாடு குடபுலமென்று துணியலாமெனின், அதுவும் பிறழ்ச்சியுடையதேயாம். எப்படியென்றால், யானை என்னும் விலங்குக்கு வேழமென்னும்பெயருடைமையும் நீண்டதொருபுழைக்கையுடைமையுமாகிய இவ்விரண்டுமொருங்கிருப்பதுகொண்டு "தூம்புடைநெடுங்கைவேழந்துற்றியவெள்ளிலேபோல்" என்ற சிந்தாமணியில் வெள்ளிலை (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லப்பட்டது யானையென்னும் விலங்கேயாமென்று துணிதல்போலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி, பொருநையாறுடைமையும் வஞ்சியென்னும்பெயருடைமையும் கருவூரென்னும்பெயருடைமையும் ஆகிய மூன்றேதுக்கூட்டமுடைமையால் அவையுள்ளகொங்கு குடபுலமாகுமென்று துணியலாமெனின் அதுவும் பிறழ்ச்சியுடையதாம். எப்படியெனில் தூம்புடைநெடுங்கைவேழமென்றமையால் நீண்டபுழைக்கையும், வேழம் என்னும்பெயருடைமையும், "காட்டானையுண்டகனி" என்றமையால் ஆனையென்னும் பெயருடைமையுமாகிய மூன்றேதுக்கூட்டமுடைமையால், வெள்ளிலை (விளங்கனியை) யுண்டதாகச்சொல்லும் நோய்விசேடத்தை யானையென்னும் விலங்கேயாம் என்று துணிவதுபோலும் அநுமானப்போலியாமெனவறிக.

இனி இவற்றுடன் சேரர்மலைப்பெயரையுடைய கொல்லிமலை அடுத்திருப்பதுபற்றி நான்கேதுக்கூட்டத்தால் அவையுள்ள கொங்கு நாட்டைக்குடபுலமென்று துணிவோமெனில், சேரலூர்ப்பெயருடையதாகிய கீழ்கடற்றொண்டியையும் சேர்த்துக்கொண்டால் ஐந்தேதுக்கூட்டத்தால் மிகவும் வலியுடையதாகிக் கீழ்கடலளவுங்குடபுலமென்று துணிதலாம்போலுமென்னும் விதண்டாவாதத்தெதிருரையால் நிரசிக்கப்படுமாதலால் அதுவும் சாதகமாகாதெனவறிக.

இனி "குடகொல்லி" "கொல்லிக் குடவரை" என்று சொல்லப்பட்டிருப்பதால் கொல்லிமலையுடைமைபற்றிக் குடபுலமென் றுதுணிய

லாகாதோவெனின், அக்கொல்லிக்குடவரை கொங்கின்புறத்துள்ளது என்று நிச்சயிக்கப்பட்டாலன்றிச் சமுசயமாயிருக்குமளவும் அதனுலும் அஃதுள்ளவிடம் குடபுலமென்று துணியப்படாதெனவறிக. அக்கொல்லி சேரர்க்குரிய கொல்லிக்குடவரையாகாதென்பது பின்பு "சேரர்கொல்லிமலை யாது" என்னும் ஆராய்ச்சியாலறிக.

ஆதலால், சேரர்க்குரியதோ? அன்றோ? வென்னும் ஐயநிலைக்களமாகிய வஞ்சி, கருவூர், பொருநை, கொல்லி முதலிய பெயர்ப்பொருள்களைக்கொண்டு, அவையுள்ள கொங்கு குடபுலமென்றுதுணிவது தவறுமெனவறிக. இதுகாறும் கொங்கு குடபுலமாமென்பதற்கு வாதகக்ஷியிற்சொல்லுஞ்சாதனங்களை ஆராய்ந்தமட்டில் ஒன்றேனும் வாதகக்ஷிக்குச் சாதகமாகாமலும்; பெரும்பாலும் எதிர்வாதகக்ஷிக்கே சாதகங்களாகியும், வாதகக்ஷிக்குப்பாதகங்களாகியுமிருப்பதால் இவற்றுற் கொங்கு குடபுலமென்று துணியப்படாததாயிற்று.

---

## 4. கொங்கு குடபுலமாகாதா ?

---

இனி எதிர்வாதகக்ஷியிற் கொங்கு குடபுலமாகாதென்று தெளிதற்கும் பல சான்றுகளுள்ளன. அவற்றையும் வேண்டுமானல் விசாரிப்போம்.

அவையாவெனின்:—

1. கொங்குநாடு, நடுநாடாயிருக்கிறதன்சொரூபத்தால், புடைநாடாகிய குடபுலமாகமாட்டாதென்பதைத் தானேகாட்டுவது.

2. "கொங்கிளங்கோசர்தங்கள்நாட்டகத்து,நங்கைக்குவிழவொடு சாந்திசெய்ய, மழைதொழிலென்றுமாறுதாயிற்று" எனச் சிலப்பதிகாரத்துள் மலைமண்டலத்தின் வேறுகச்சொல்லியிருப்பது.

(சிலப்பதிகாரம், உரைபெறுகட்டுரை - 2.)

3. குடகக்கொங்கருமாளுவவேந்தருங், கடல்சூழிலங்கைக் கயவாகுவேந்தனு, மேந்நாட்டாங்கண்................வந்தீ கென்று" வரம்வேண்டியது.

(சிலப்பதிகாரம், வரந்தருகாதை - 159 முதல் 163 வரை அடிகள்.)

4. "இவளோ, கொங்கச்செல்விகுடமலையாட்டி, தென்றமிழ்ப் பாவைசெய்ததவக்கொழுந்து" எனக் கண்ணகிக்குப் பின் னிகழுஞ்சிறப்புத்தோன்றத் தெய்வங்கூறியது.

(சிலப்பதிகாரம், வேட்டுவவரி - 47, 48 அடிகள்.)

5. "மைந்தராடியமயங்குபெருந்தானைக், கொங்குபுறம்பெற்ற கொற்றவேந்தே......................வஞ்சிமுற்றம்வயக்கள னாக, அஞ்சாமறவராட்போர்பழித்துக், கொண்டனைபெரு மகுடபுலத்ததரி" என்ற 373-ம் புறப்பாட்டு.

6. "வில்லவன்கோதைவேந்தற்குரைக்கும், நும்போல்வேந்தர் நும்மோடிகலிக், கொங்கர்செங்களத்துக்கொடுவரிக்கயற் கொடி, பகைப்புறத்துத்தந்தன ராயினுமாங்கவை, திசை முகவேழத்தின்செவியகம்புக்கன. (சிலப்பதிகாரம், காட்சிக் காதை - 151 முதல் 155 வரை அடிகள்.)

7. "மாகெழுகொங்கர்நாடகப்படுத்த,வேல்கெழுதானைவெருவரு தோன்றல்" என்ற பதிற்றுப்பத்- 22-ம்பாட்டின் 15-16-ம் அடிகள்.

8. 'கொங்கரொடுகுடபுலத்துக்கோமன்னர்திறைகொணர, என்ற பெரியபுராணவாக்கியம்.

(புகழ்ச்சோழநாயனார்புராணம், செய்யுள் - 11.)

9. 'குடிசூழ்கொங்கர்குடபுலத்தார் கொணருந்திறைகண்டிடல் வேண்டி, என்ற கருவூர்ப்புராணவாக்கியம். ( எறிபத்தச் சருக்கம். செய்யுள். 5.)

10. சேயகொங்கர்நாடணைந்தார் திருவாரூரர்சேரருடன், என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற் - பு. செய்யுள். 139.)

11. "கொங்கர்நாடுகடந்துபோய்க் குலவுமலைநாட்டெல்லையுற" என்ற பெரியபுராணவாக்கியம். (கழறிற்-பு. செய். 40.)

---

~~(தொடரும்)~~

ப—ர்.

ஸ்ரீ:

# ஒருவிஞ்ஞாபனம்

---

செந்தமிழ்ப்பத்திராசிரியர்க்கு:

ஐயா! தாங்கள்ஸேதுஸமஸ்தானவித்வான் ப்ரஹ்மஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்எழுதிய "வஞ்சிமாநகர்" என்னும்வியாஸத்திற் கண்டவிஷயங்களைமறுத்துச் செந்தமிழில் "வஞ்சிமாநகராராய்ச்சி" "வாதமுடிவுரையாராய்வு" என்பனவாகச் சிலதலைப்பின்கீழ் எழுதி வருவனவற்றைக்கண்ணுற்றேன். அதனின்றும் தங்களதுசாசனபரிசயமும், சங்கநூற்றேர்ச்சியும், வடமொழியறிவும் இவ்வளவேயாமெனச் செவ்வனே விளங்குவதால், அதனை ஈண்டுக்காட்டி எழுதலானேன்.

"கோனேரின்மைகொண்டான்: கொங்கானவீரகேரளசோழமண்டலம்............" என்று சாசனந்தொடங்கியதும், கோனேரின்மைகொண்டானுடையகொங்குஎன்று ஆறும்வேற்றுமைத்தொகையாகப் பொருள்கொண்டுவிட்டீர்களே! அந்தோ! அத்தொடர்க்குஅதுபொருளன்றே! கோனேரின்மைகொண்டான் அச்சாசனம் இடுகின்றானென்றுவது அவன்காலத்துஅச்சாசனம் இடப்பெற்றதென்றுவதுபொருள் கொள்ளப்படுமேயன்றி வேறன்றே! யான்கூறுவதேபொருளாதல் "கோனேரின்மைகொண்டான்: பாண்டியமண்டலம்........." எனவும் "கோனேரின்மைகொண்டான்: திருக்குருகூர்தாஸர்................." எனவும் வரும்சாசனங்களால்அறிக.

வஞ்சிமாநகர்என்பது கொங்கிற்கருவூருக்குப்பெயரென்பதைத் தாங்கள்ஒப்புக்கொண்டு அவ்வூர் சோழனூர்என்றுதுணிந்துகூறத்தலைப்பட்டீர்கள். தாங்கள்கண்டசங்கநூல்களுள் வஞ்சியைச்சோழர்க்குப் பகைப்புலமாகவன்றி உரிமையுடையவூராக எங்கேனும்பிரஸ்தாபித்துள்ளதோ? "குடையொடு, கழுமலந்தந்தநற்றேர்ச்செம்பியன்பங்குனி விழவின்வஞ்சி" என்று இறையனார்களவியல் மேற்கோளில்வருதல் கொண்டு செம்பியனுக்கு (சோழனுக்கு) வஞ்சிஉரியதென்பீராயின்,

அது பொருளன்று * சேரனதான கழுமலத்தைச்செம்பியன்றந்தமை காரணமாக வஞ்சி அவனுக்குப்பங்குனிவிழவயரும்படி ஒருகாலத்து வசப்பட்டதாஎன்பதே அதன்பொருளென்றறிமின். அன்றாயின் அக் களவியல்மேற்கோளில் "வரோதயன்வஞ்சியன்னாய்" என்றுவருதற்குப் பாண்டியனுக்கும்வஞ்சிஉரியதாகின்றது. ஆகச் சோழன்வஞ்சிஒன்று, பாண்டியன்வஞ்சிஒன்று, 'கோதைஓம்பிக்காக்கும்வஞ்சி' (அகம்-263) என்றமையால் சேரன்வஞ்சிஒன்று என மூன்றுவஞ்சியாகின்றது. இப்படி வஞ்சியை மூன்றென்றுகொள்வதினும் சேரனதுவஞ்சியைப் பாண்டியனும்சோழனும்கைப்பற்றிய ஓர்ஏகதேசகாலத்து அச்சிறப்பு நோக்கி அவ்வூர்அவ்வவ்வரசரதாக உபசரித்துவழங்கப்பட்டதென்று கொள்வதேநேர். அப்படியன்றித் தாங்கள்கருதியபடியாயின், சோழர்க் குரியபுகாரானது "புகார்ச்செல்வ" (பதிற்.)எனச் சேரனுக்கும் "அரிகேசரிஅந்தண்புகார்" (இறை.களவி)எனப் பாண்டியனுக்கும் கூறுவது கொண்டு மூன்றுபுகார் அன்றோகூறவேண்டும். இவ்வாறெல்லாம் பொருளல்லவென்பது சங்கநூல்களைப்பல்காலும்படித்து நுணுகி ஆராய்ந்தாற்றான்புலனாகும். அந்நூல்களிற் பயிற்சி தங்களுக்குச்சிறிது மில்லையென்பதற்கும் பின்னுஞ்சிலகாட்டுவேன். புறப்பாட்டு 13-ம் செய்யுளை எடுத்துக்கொண்டு "விழுநீர்வேலிநாடுகிழவோன் எனச் சேரனைக் கூறினமையால் குடபுலமாகியசேரமண்டலம் வேலிபோலரணாயமைந்தகுடகடலால்வரையப்பட்டதெனஒருபுறத்தின்எல்லையும் நிராக்ஷேபமாயறியப்பட்டது" என்றுதுணிந்தஎழுதிவிட்டீர்கள். இவ் வடியிற்குறிப்பிட்டநாடுகிழவோன் யாவனென்பதையும் நாடு யாதென் பதையும் நீர்வேலியின்னதென்பதையும் தாங்கள்அறிந்துகொள்ளாமை பற்றித் தமிழறிஞர்பலரும் பெருவியப்பும் துக்கமுமுறுகின்றனர்.

பள்ளிச்சிறாரும்எளிதிலுணருமாறு புறப்பாட்டுரையாசிரியர் அப்பாட்டிற்கு அந்வயங்கூறி முடிபுகாட்டித்துறைவிளக்கமுஞ்செய் திருக்க அதையுணராது மனம்போனபடிஎழுதினீர்கள். ஈண்டு நீங்கள்தாம் ஆ குதிரைஎன்று அநந்வயப்படக்கூறினீர்கள். இப் போதாவது அப்புறப்பாட்டைச் செவ்வனே ஒருமுறையாவதுபடித் துப்பாருங்கள். இனி மேற்படி17-ம்பாட்டில், "குலையிறைஞ்சிய

* கழுமலம்—சேரநாட்டு ஓர் ஊர் "குட்டுவன் கழுமலத்தன்ன" எனக் காண்க. இது நகொட்டிலுள்ளது. (அகம்-270).

கோட்டாழை, அகல்வயல்மலைவேலி, நிலவுமணல்வியன்கானல்......
......வரையாவீகைக்குடவர்கோவே" என்றதனால் கடல்வேலிஒருபுற
மிருப்பதைத்தழுவிக்கொண்டே மற்றொருபுறம் மலைவேலியுமுடைய
தாகக் குடவர்கோவுக்குரிய தொண்டிராஜ்யமாகிய குடபுலத்தைவிசே
டித்தமையால் மலையுங்கடலும் வேலியாகவரைந்துகொள்ளப்பட்ட
மலைமண்டிலமேகுடவர்கோவுக்குரியகுடபுலம் என்பதுபெறப்படுகிறது'
என்றுவரைந்து, கீழ்க்குறிப்பின்கண் யானைக்கட்சேய்மாந்தரன் குட
வர்கோஎன்றமையால் பேரரசன்என்றும் கூறினீர்கள். இவ்விஷயத்
தில் தாங்கள்பலவகையில் தவறினீர்கள். அதைவிளக்குகிறேன்.
தொண்டிநாடும் அதனைச்சார்ந்த பிரதேசமுந்தாம் தாங்கள்கூறுமாறு
கடன்மலையிடைப்பட்ட தொண்டிராஜ்யமாகும். தொண்டிராஜ்யம்
குடபுலத்தில் ஒருசிறுபகுதியேயென்று தாங்கள்அறியாதுபோனீர்கள்.
தொண்டிராஜ்யம் கூறவே குடபுலம்அடங்குமென்பதுஅறியாமையாய்
முடியும்.

தாங்கள்குறிப்பிட்டபுறப்பாட்டு கோச்சேரமான் யானைக்கட்
சேய்மாந்தரன்சேரலிரும்பொறையைப் புகழ்ந்துபாடியசெய்யுளாகும்.
இச்சேய்மாந்தரன் குடவர்கோக்களுள் குறுநிலமன்னனாவான். பேரர
சனேயல்லன். அவனோடுசமகாலத்துக் குடபுலத்தில் தகடூர்எறிந்த
பெருஞ்சேரலிரும்பொறையும் களங்காய்க்கண்ணிநார்முடிச்சேரலும்,
சேரர்பரம்பரையைச்சார்ந்தானான அஞ்சிஅதிகமானும் அரசாண்
டனர். இந்நால்வருள் நம்சேய்மாந்தரன் தொண்டிராஜ்யத்தையும்
விளங்கிலையும் கொல்லியையும்ஆண்டுவந்தான். அவற்றுள் கொல்லி
அவன்கையினின்றும் பறிக்கப்பெற்றுத் தகடூர்எறிந்தபெருஞ்சேர
லிரும்பொறைக்குக் காரியால்அளிக்கப்பெற்றது. பின்பு விளங்கிலும்
அவன்கையைவிட்டுப்போகும்படிநேர்வதாயிருக்கையில், அவன்அரிது
முயன்று அதனைக்காத்துக்கொண்டான். இவ்விளங்கில் மேல்கடலருகி
லுள்ளது. ஆகவே இச்சேய்மாந்தரனுக்குத் தொண்டிராஜ்யமும்
விளங்கில்நகருமே எஞ்சியன. அவற்றின் எல்லைகள் கடலும்மலையு
மாகும்.

தகடூர்எறிந்தபெருஞ்சேரலிரும்பொறை கருவூரிடையிருந்து
அரசுசெய்தவன். அவன் கொங்குமுழுமையும்ஆண்டவன். களங்

காய்க்கண்ணிநார்முடிச்சேரல் தொண்டிராஜ்யத்திற்கு வடபாலுள்ளதும் மேல்கடலோரமாயுள்ளதுமான சிறியகுறுகிநீண்டராஜ்யத்தை ஆண்டவன். அஞ்சிஅதிகமான் சேரமான்களுக்குஉறவினனாதலால் கொல்லிக்கூற்றத்தின்கண்ணுள்ள தகடூரிலிருந்துஅரசுசெய்தவன். இந்நால்வரும்ஆண்டபெரும்பிரதேசம் ஒருசேரக்குடபுலமாகுமன்றித் தொண்டிராஜ்யம்மாத்திரம்குடபுலமாகாது. மேல்கடலோரத்தில் இத்தொண்டியைப்போலவே மாந்தையும் இராஜதானிநகரமாய்ப்பெருஞ்சேரலாதனால்ஆளப்பெற்றுவந்தது. இப்பெருஞ்சேரலாதன்காலத்து நெடுஞ்சேரலாதனும் குடபுலத்துஅரசாண்டவன். இந்நெடுஞ்சேரலாதனும்குடக்கோஎனப்படுவான். இதனைக்கொண்டு இவன்குடபுல முழுவதும்ஆண்டஏகசக்ராதிபதிஎனல் பொருந்தாது. சேரவரசர்கள் குடபுலத்தைச் சிறியபகுதிகளாய்ப் பிரித்துப் பலராக ஆண்டுவந்ததாகவே தெரிகிறது.

மற்றுச் சேய்மாந்தரன்காலத்திருந்த சோழனும் பாண்டியனும் இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளியும், தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியனுமாவர். அவ்விருவரசராலும் நம்மாந்தரன் தோற்றுவருந்தினன். (புறம் 17&125.) அக்காலத்துச்சேரரில் பேரரசன் தகடூர்எறிந்தபெருஞ்சேரலிரும்பொறையே. அவனே பதிற்றுப்பத்து எட்டாம்பத்துக்கொண்டவன். நம்மாந்தரன் புலவர்களைப் பேணியபுகழும் தன்னாட்டைச் செவ்விபெறஆண்டபெருமையுமே யுடையான். கூடலூர்கிழாரைக்கொண்டு ஐங்குறுநூறுதொகுப்பித்த பேருபகாரியாவான்.

இனித் தங்களதுவடநூலாராய்ச்சியைச்சோதிப்பேன். ஸஹ்யபர்வதமும் மலையபர்வதமும் ஒன்றென்று வான்மீகர்இராமாயணச் சுலோகம்எடுத்து மேற்கோள்காட்டினீர்கள். மகாநுபாவர்கோவிந்தராஜர் அயோமுகமாகியஸஹ்யபர்வதம் மலையபர்வதத்தின்வேறென உணர்த்தவேண்டி "தஸ்ய" என்பதற்குப் "ப்ரவிஷ்டஸ்ய" என்று விளக்கியருளினர். இதனால் தஸ்யஎன்பது முன்னையதைச்சுட்டாது "அப் பூதலமென்னுநங்கைதன்னையேநோக்கிப்புக்கான்" என்புழிப் போல உலகறிபொருளையுணர்த்துவதென்பதே கோவிந்தராஜர் கருத்தென்பதும் தாங்கள்கருதியபடிகொள்ளுதல் அவ்வுரையாளர்க்கும்

முன்னூல்வழக்குக்கும் முற்றும்விரோதமென்பதும் தெரிந்துகொண் மின். மகாகவிகாளிதாஸர்க்கும் ஸஹ்யமும்மலையமும்வேறுவேறென் பதேகருத்தாதலை இரகுவம்சம்நோக்கி அறியலாம்.

இனித் தாங்கள் சங்கநூல், சாசஸனம்முதலியவற்றைக்குறித்து எழுதப்புகுமுன் அவற்றிற் சிறிதுபரிசயம்செய்துகொண்டபிறகு எழுதத்தலைப்படுதல் லோகோபகாரமாகவிருக்கும். 'கல்லாதமேற் கொண்டொழுகல்' யாதுவிளைக்குமென்பதையும் தாங்கள்அறிவீர்கள். இம்மட்டோடுநிறுத்துகிறேன். பிறபின்.

இங்ஙனம்

கம்பர் விலாஸம்,
மைலாப்பூர்.

வெ. இராஜகோபாலன்,

15—12—17

---

ஸ்ரீ:

# பிரதிவிஞ்ஞாபனம்.

---

ஸ்ரீமத், வெ. இராஜகோபாலையங்காரவர்களுக்கு:—

ஐயா, தாங்களெழுதிய "ஒரு விஞ்ஞாபநம்"என்னும் லிகிதம் இதன் முன் வைக்கப்பட்டுள்ளது. அதில் தாங்கள் எழுதியபடி வஞ்சிமா நகர் என்ற வியாசத்திற்சொல்லும்விஷயங்களை நான் மறுக்கவரவில்லை; அவற்றின் உண்மையறியுமவாவுடையவனாகவே நின்று எனக்குத் தோன்றும் ஆக்ஷேபங்களை வெளியிட்டுவருகிறேன்.

எனக்குச் சிலாசாசனங்களிலும், சங்கநூல்களிலும், சம்ஸ்கிருதத் திலும் சிறிதும் பயிற்சியில்லையென்பது எனக்கும், என்னையறிந்த பலர்க்கும் நன்குதெரியும்; பிறர்க்கும் தெரியும்படி நானேதெரிவித் துக்கொள்கிறேன்; அதற்காகத் தாங்கள் வீணான சிரமத்தை எடுத்துக் கொள்ளவேண்டாமே.

சங்கநூன்முதலியவற்றைச் சங்கையறப்பயிற்றுவிக்கும் தங்கள் போல்வார் இங்கில்லாமையால் அவற்றைப்பயிலவியலாதிருக்கிறேன்; இனிச்சிறிதுசிறிதாகத் தங்களைக்கேட்டே நன்குதெரிந்துகொள்வேன்.

உண்மையறியுமவாவுடையோன் எல்லாம்வல்லனுயிருக்கமாட்டானுகையால் அவனறியவேண்டும் விஷயங்களை ஆக்ஷேபிக்கவேகூடாதென்றுசொல்லற்கிடமில்லையென்பதும் தாங்கள் அறிந்ததே. எனது ஆக்ஷேபம் எவ்வளவு பிழைபடுமோ அவ்வளவும் வாதககூடியின் விஷயங்களை மயக்கறத்தெளிதற்குபகாரமாயிருக்குமாதலால் அவற்றைத் தாங்கள் நன்கறிந்து வெளியிட்டுவரவேண்டுமென்று நானே கேட்டுக் கொள்கிறேன்.

சங்கநூற்பயிற்சிமுதலியவற்றிற்றலைசிறந்த தாங்களெழுதுவனவற்றைச் சீர்தூக்கியாராயுந்திற மெனக்குச்சிறிதுமில்லாமையா லவற்றை விடுத்துப் பள்ளிச்சிறுருங்தெள்ளிதினறியும் பதின்மூன்றும்புறப்பாட்டின்பொருளைத்தங்களிடமே முதலிற்கேட்டறியவிரும்பிக் கீழேகாட்டியிருக்கும்வினுக்களுக்கு விடையளித்தருளவேண்டுகிறேன். அவ்விடை வருந்திறங்கொண்டு தாங்கள்சொல்லும் மற்றவற்றையும் அறிஞர் சீர்தூக்கியறிவாராக.

1. இவன்யாரென்குவையாயின் என்னும் புறப்பாட்டு யாரை நோக்கிப்பாடியது ?
2. யார்பொருட்டாகப்பாடியது ?
3. என்னபயன் கருதிப்பாடியது ?
4. இங்குப்பயனளிக்கக்கடவனுனவுதாரன் யார் ?
5. அப்பயனைப்பெறவேண்டிநிற்கும் தீனன் யார் ?
6. இவ்விருவருள்ளும் இப்பாட்டினீற்றடிநான்காலும் பெருமைதோன்ற விசேடித்த மண்டலாதிபதியென்று துதித்தற்குரியவன் பயனளித்தற்குரிய பிரஸன்னனுனவுதாரனு? பயன்கொள்ளற்குநிற்கும் அப்பிரஸன்னனுன தீனனு ?
7. "விழுநீர்" என்பது யாது ?
8. 'வேலி' யாவது யாது ?
9. விழுநீர்வேலி யார்நாட்டுக்கு மிக்குள்ளது ?

10. விளைந்தகள்ளும் மஞ்ஞையும் எந்நிலத்துக்குரியன ? அவை யார்நாட்டுக்கு மிகப்பொருத்தமுள்ளன ? மயிற்பீலியை நெற்போர்போலத் தொகுத்துவைத்துவிற்கும் வழக்கம் யார்நாட்டுள்ளது ?

11. "விழுநீர்வேலிநாடுகிழவோன்"என்பதற்குச்சோழன் என்று பொருள்கொள்வதிலுள்ள குணமென்ன ?

12. அதற்கு, சேரன் என்று பொருள்கொள்வதிலுள்ள குற்றம் என்ன ?

13. இப்பாட்டின் முதலிலுள்ள "இவன்" என்னும் சுட்டுக்குப் பிரகாரமாயிருப்பது யாது ?

14. "யார்" என்னும்வினா நிகழ்தற்குரிய ஐயப்பாட்டின் ஆகாரமும் அதன் நிரூபகமும் என்ன ? (அதாவது ஐயத்தின் இருதலைவடிவும் காரணத்துடன் தெரிவிக்கவேண்டுமென்பதே.)

15. அவ்வையத்திற்றெளிவுண்டாகிய ஒருதலை யாது ? அதற்கு நிரூபகமென்ன ?

16. 'என்குவையாயின்' என்னும் எச்சச்சொல்லுக்கு முடிபு யாது ?

17. தாங்கள்கருதியபடியே உரையெழுதப்பட்டிருப்பதாகவைத்துக்கொள்வோம்; பாட்டு, உரை இவ்விரண்டனுட் பிரதானம் யாது ? அப்பிரதானம் யாது ?

18. பிரதானத்தை அப்பிரதானம் பின்பற்றியிருக்கவேண்டியது முறையா ? அப்பிரதானத்தையே பிரதானம் பின்பற்றியிருக்கவேண்டுமென்பது முறையா ?

19. பாட்டு, பொருள் இவ்விரண்டனுட் பிரதானம் யாது? அப்பிரதானம் யாது ? பொருளைவைத்துப் பாட்டுப்பாடப்பட்டதா? பாட்டைப்பாடிக்கொண்டு அதற்குப்பொருள்தேடிக் கொணரப்பட்டதா ?

20. இப்பாட்டுக்கேட்டோன் யார்க்கு என்னசெய்திருக்கவேண்டும் ? அதற்குப்பிரதியாக யார் யாருக்கு என்னசெய்திருக்கவேண்டும் ?

21\. இப்புறப்பாட்டின் பொருளாராய்ச்சியால் அறியக்கிடக்கும் சரித்திரத்தை ஆதியோடந்தமாக யாருமறியத்தெரிவிக்க.

இவற்றிற்கு விடைவந்தவுடனே இன்னும் நான் தெளியவேண்டு மெளியனவற்றைச்சிறிதுசிறிதாகத்தெரிவித்துத்தெரியத்தெரியக்கடின முள்ளவற்றையும் மெல்லமெல்லத் தங்களிடமேகற்றுக்கொள்ளச்சன்னத்தனுயிருக்கிறேன்.

"இனித் தாங்கள் சங்கநூல் சாசனம் முதலியவற்றைக்குறித்து எழுதப்புகுமுன் அவற்றிற்சிறிது பரிசயம் செய்துகொண்டே பிறகு எழுதத்தலைப்படுதல் லோகோபகாரமாகவிருக்கும்" என்று எனக்குப்புத்திசொல்வதைப்பற்றி மிகவும் நன்றிபாராட்டுகிறேன். இப்படிப் புத்திசொல்லும் ஆப்தரான தங்களிடமே அவற்றைத்தெரிந்துகொள்ளப் பலருமறிய நான்முயன்றுவிட்டேனுகையால் தெரிவிக்கவேண்டிய தலைப்பொறுப்புத் தங்களுடையதாயிருக்கிறது. ஆகையால் இனி அவற்றிற்பரிசயமில்லாத குற்றம் என்னுடையதாகமாட்டாது.

"கல்லாதமேற்கொண்டொழுகல் யாதுவிளைக்குமென்பதையும் தாங்கள் அறிவீர்கள்" என்று எனக்குப்புத்திசொல்லுகிறீர்கள். யான் இதுவரை அதனையறிந்தேனில்லை; இப்பொழுதுதான் தங்களையாசிரியராக வரித்ததிலிருந்தும் அறிந்துகொண்டேன். ஆயினும் தாங்கள் என்னை நன்றாயறிந்துகொள்ளாமையால் அவ்வருமைத்திருக்குறளைக் கசடறவல்லதொருசிறிதுமில்லாத என்விஷயத்திற்றவறாயுபயோகித்து வீணுக்கிவிட்டீர்களேயென்று வியசனிக்கிறேன். உண்மையாகவே கசடறவல்லதொன்றுமென்னிடமில்லாமையால் ஐயத்தால்வரக்கிடக்குமேதமொன்றுமின்றென்பதை யானுணர்ந்துள்ளேனாதலாலும், நான் கற்றது மற்றொன்றுமில்லாமையாலும் மற்று யான் எதனைமேற்கொண்டொழுகுவேனென்பதைத் தாங்களே அறிந்துரைப்பீராக.

தாங்கள் "ஒரு விஞ்ஞாபநத்"திற் சங்கநூலாராய்ச்சிவிஷயமாகச் சில கதையெழுதியிருக்கிறீர்கள்; அவற்றையெல்லாம் தங்கள்போல்வார்பலருஞ்சீர்தூக்கித் தாமுமறிந்து பிறர்க்குமறிவிப்பார்களென்று எண்ணுகிறேன்.

தாங்கள் இச்செந்தமிழ்ப்பகுதியில் வெளியிடுவிப்பித்த "ஒருவிஞ்ஞாபனம்" என்னும் விஷயத்தை மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் கவனித்து அதற்குச் செய்யவேண்டியதெதுவோ அதைத் தவறாதுசெய்வார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

செந்தமிழ்ப்பத்திராசிரியர்.

உ

# * கபிலர்கவித்திறம்.

சங்கப் புலவர்தம் பங்கயச் சீரடி
தங்குக என்னுளம் துங்கமுறற் பொருட்டே.

செந்தமிழ்வளஞ்சுரத்தலில் வற்றாவூற்றாகும் சங்கமருவியநூல்கள் பண்டைத்தமிழ்ப்பெருமையை விளக்குதற்குத் தக்க சாதனங்களா மென்பது தமிழறிஞர்க்கெல்லாம் ஒப்பமுடிந்ததாம். அத்தகைப்பெரு நூல்களையாத்த பண்டைப்புலவர்களில் கபிலர் என்னும் கவிவாணர் அறிவு ஒழுக்கம் இவற்றால் மிகச்சிறந்து, அப்புலவர்பெருமக்கள் முன் னணியில் முதன்மைபெற விளங்குபவராவர்.

கபிலர் என்னும் ஒரேபெயருடைப்புலவர்கள் தமிழிற் சிலருளர். தொல்கபிலர் என ஒருகபிலரும், ஔவை திருவள்ளுவர் முதலிய வர்க்குச் சகோதரராக ஒருகபிலரும், சைவத்திருமுறைகளில் 11-ஆம் திருமுறையிற் பிரபந்தங்கள் அருளிய 'கபிலதேவநாயனார்' என ஒரு கபிலரும், 'கபிலரகவல்' என்பதிற் கேட்கப்படுபவராகிய ஒரு கபில ரும், 'கபிலபரணர்' என்னுந்தொடரில் வழக்காறுபெற்ற ஒருகபிலரும், "தமிழெனும் அளப்பருஞ் சலதியில்"† ஆங்காங்கு சம்பந்தப்பட்டுள் ளார்கள். இவர்களுடைய சரித்திரவிவரம்பலவும் நமக்கு உள்ளன உள்ளவாறு முழுதும் தெள்ளிதிற் புலப்படவில்லை. இவர்களுள் "கபில பரணர்" என்பதிற் சுட்டப்படுபவரும், கடைச்சங்கநூல்கள் பலவற் றுள்ளும் பற்பல அருங்கவிகளை ஆக்கியோருமாகிய கபிலரே நாம் ஈண்டுத்தலையங்கத்துக் குறித்துள நல்லிசைப்புலவர். இவரே கவித் துவப்பெருமையால் இது 'கபிலரது பாட்டு' என ஆங்காங்கு உரை

*மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 15-ஆம் வருஷோத்ஸவக்கொண்டாட்டக் கூட்டத்தின்கண் பாலைக்காட்டு ஸ்ரீமான், ராவ்பகதூர் சின்னசாமிப்பிள்ளை யவர்கள் அக்ராஸநம் வகிக்க, இவ்விஷயம் பருப்பொருளாகப் பிரசங்கிக்கப் பெற்றது.

† சலதி—சமுத்திரம்.

யாசிரியச்சான்றோர்கள் மதித்துக்கூறும் பாராட்டுக்கு இலக்காய் இலங்குபவர். இப்புலவர்பெருமானியற்றியருளிய செய்யுட்களின் சிறப்பைச் சிறிதுவிரித்துரைப்பான்விழைகின்றேம்.

"அமிழ்திற்சிறந்த தமிழ்மொழியதனை, ஒன்பான் சுவைபுணர்த் தன்பால் வளர்த்தருள் நச்சும்பெருமை முச்சங்கத்துள்", கடைச்சங்கத்தார் அருளித்தொகுத்த எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்னும் முத்தொகைநூல்களினும் [எட்டுத்தொகையிற் பல இடங்களினும்;* பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு; பதினெண்கீழ்க்கணக்கில் இன்னாநாற்பது] அத்தொகைநூல்கள் திரட்டிய உபகாரசீலர்களால் நம் கபிலருடைய பாடல்களும் நூல்களும் சேர்க்கப்பெற்றிருப்பது இவருடைய புலமை எத்துணை உயர்வாகக்கடைச் சங்ககாலத்துச்சான்றோரால் நன்குமதிக்கப்பெற்றதென்பதை நன்கு விளக்கும்.

அன்றியும் இக்கவிஞரைக்குறித்துப் பண்டைப்புலவர்கள் பாராட்டுமிடத்து, —ஒருபுலவர் தம்பாடலில் பிறபுலவர்களைச் சுட்டிப்பாடுதல் தமிழில் மிகவும் அரியவழக்கே—

"......................வயங்குசெந் நாவின்
(1)உவலை கூராக் கவலையில் நெஞ்சில்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன்" எனப்

பதிற்றுப்பத்தில் (85) பெருங்குன்றூர் கிழாரும்,

"................................தாழாது
செறுத்த செய்யுட் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" எனவும்,
"நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்
புலனழுக் கற்ற அந்த ணாளன்" எனவும்,

---

*எட்டுத்தொகையில் இதுகாறுந்தெரிந்தவரை கபிலர் பாடல் நற்றிணையில் 20; குறுந்தொகையில் 29; ஐங்குறுநூற்றில் 100; பதிற்றுப்பத்தில் 10; அகநானூற்றில் 16; புறநானூற்றில் 30; கலித்தொகையில் 29; பரிபாடலில் குறைப்பிரதிகளிற் கபிலர்பாடல் காணப்படவில்லை; நிறைப்பிரதியோ யாண்டும் கிடைத்திலது. (1) பொய்.

"பொய்யா நாவிற் கபிலன்" எனவும், புறநானூற்றில் முறையே பொருந்திலிளங்கீரனாரும் (53) மாறோக் கத்து நப்பசலையாரும்¶ (126—174) இவருடைய புலமைமாட்சியே யன்றி வாய்மையாதிய நற்குணமாட்சியையும் வாயாரப்புகழ்ந்திருப் பதை நோக்குங்கால், இப்புலவர்பெருந்தகையாருடைய அருமை பெருமைகள் "வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த" தன்மை யனவாகுமென்பது வெளிப்படை.

இனி, இவருடைய செய்யுட்களின் சிறப்பைப்பற்றி ஆராயப் புகுவாம். இவருடைய செய்யுட்களிற்பல குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்) வளத்தைச் செவ்வனே விளக்குவனவாகும். பத்துப் பாட்டில் இவர் பாடியது குறிஞ்சிப்பாட்டு; ஐங்குறுநூற்றிற் குறிஞ் சிக்குறுநூறு; புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலிய நூல் களில் தனிப்பாக்களாகப்பாடியவற்றுள்ளும் பெரும்பாலன குறிஞ்சித் திணைப்பாக்களே. கலித்தொகையிலுள்ள ஐந்திணைப்பகுதிகளையும் ஐந்து தனிப்புலவர்கள் செய்தனரென்றும், அவற்றை நெய்தற்பகுதிக் காசிரியராகிய நல்லந்துவனார் ஒன்றுசேர்த்துத் தொகைநூலாக்கின ரென்றும் சின்னாட்குமுன்னர் ஸேதுசமஸ்தானமஹாவித்வானும் செந்தமிழாராய்ச்சியில் நுண்மாணுழைபுலமுடையாருமான ப்ரஹ்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்கார் அவர்கள் தமக்குத் திருநெல்வேலியில் அரிதிற்கிடைத்த ஒரொற்றையேட்டுத் தனிச்செய்யுளால்* ஓர் பிர சங்கவாயிலாக விளக்கினார்கள். இதனால் கலித்தொகையில் குறிஞ் சிக்கலி பாடியதும் கபிலரேயெனத் தெரிகிறது. இவராற் பாடப்பெற்ற பிரமுகர்களில் வேள் பாரி, சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் மலையமான் திருமுடிக்காரி முதலியவர்கள் மலையரசர்களேயாதலும் நோக்கற்பாலது. மலையென்றால் அளவு, பெருமை, காட்சிநலம்

---

¶இதுபோல "வாய்மொழிக்கபிலன்" என அகநானூற்றிலும் (16) வந்துளது.

*பெருங்கடுங்கோ பாலை; குறிஞ்சி கபிலன்;
மருதனிள நாகன் மருதம்; —அருஞ்சோழன்
நல்லுத் தரன்முல்லை; நல்லந் துவர்நெய்தல்;
கல்விவலார் கண்ட கலி.

முதலியவற்றால் காண்பாரை மலைக்கச்செய்வதன்றோ? மலைக்காட்சியின் நயம்பற்றியன்றோ தமிழ்த்தேவாகும் முருகக்கடவுள் குறிஞ்சிக் குத்தெய்வமாய்க் குன்றுதோறும் ஆடலுகந்தது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மலைவளங்களை நம் புலவர்பெருமான் வருணித்துப்பாடுமாறு இரண்டோரிடங்காட்டி விளக்குவாம்.

"அளிதோ (1) தானே பாரியது பறம்பே;
........................................
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே;
ஒன்றே, சிறியிலை (2) வெதிரின் (3) நெல்விளை யும்மே;
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் (4) கும்மே;
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே;
நான்கே, அணிநிற ஓரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றம் தேன்சொரி யும்மே.
வான்க ணற்றவன் மலையே; வானத்து
மீன்க ணற்றவன் சுனையே.............." (புறநானூறு. 109.)

என்பதில் மலைவிளைபொருள்களை நலம்பெறக்கூறும் வளமும்,

"கன்றுற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி
ஏறு திட்ட ஏமப் பூசல்
விண்டோய் விடரகத் தியம்பும்
குன்றம்............................"(குறுந்தொகை. 241.)

என, மாடுமேய்க்கும் சிறுவர் வேங்கைமலரும்காட்சிகண்டு முழக்கிய ஆரவாரம் மலைமுழைக்கண் எதிரொலிசெய்தலை எடுத்துக்காட்டும் இயற்கையழகும்,

"குரங்கின் தலைவன் குருமயிர்க் கடுவன்
(5) சூரலஞ் சிறுகோல் கொண்டு...........
மாரி மொக்குள் புடைக்கும் நாடன்" (ஐங்குறுநூறு. 275.)

---

(1) இரங்கத்தக்கதோ? வியப்பின்கண்வந்தது. (2) சிறிய இலை.
(3) மூங்கிலினது. (4) முதிரும்; உதிருமென்பதுமாம். (5) பிரம்பு.

என்பதில் குரங்கின் சேஷ்டையை, அது மழைபொழியும்போது நீர்க் கொப்புளங்களைச் சிறுபிரம்புகொண்டு உடைத்தழிக்குஞ்செயலால் விளக்கும் எழிலும் எத்துணைச்சிறப்புள்ளன? இவைபோல்வன பலவுள. இவற்றாலும், குறிஞ்சிப்பாட்டில் ஒரேதொடையில் 100க்குக்குறை யாத பல்வேறுமலர்களைச் சேர்த்துக்கூறுவதுடன் அவற்றுட்சிலவற் றுக்கு "வான்பூங்குடசம்," "பல்லிணர்க்குரவம்," "விரிபூங்கோங்கம்," "பல்பூம்பிண்டி," "சுடர்ப்பூந்தோன்றி," என ஏற்புள அடைமொழி களை வழங்குவதனாலும், மலைபடுவளமெலாம் உற்றுநோக்கி உள்ளன உள்ளவாறே தெள்ளிதின்விளக்கிப்பாடும் நம் கவிஞர்திறம் நன்கறிய லாகும்.

இஃதன்றியும், குறிஞ்சிபாடுதலில் இப்புலவர்பிரான்திருவாக்கிற் பிறிதொருசிறப்பும் காணக்கிடக்கின்றது. அஃதாவது,—குன்று,மலை, இவைசார்நாடு முதலியவற்றைப் பாடும்போது அவற்றைச் சேத னப்பொருளாகச்செய்து, தம்மொடு ஒத்த உணர்வுடையனவாகப்பா வித்து, அவற்றின் துன்புக்கும் பிரிவுக்கும் துயருற்றிரங்கும் இவர்தம் மன இளக்கம் கவித்வமஹிமையில் முதற்றரமாண்புடையதாகும். இவற்றுக்குதாரணமாக,

"பெட்டாங் (1) கீயும் பெருவளம் பழுனி (2)
நட்டனை மன்னோ முன்னே; இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச் (3)
சேறும்(4);வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே"(புறம்-113.)
"ஈண்டுநின் றோர்க்குந் தோன்றும் சிறுவரை;
சென்றுநின் றோர்க்குந் தோன்றும் மன்ற." (5)(புறம்-114.)
"மென்றினை யாணர்த்து (6) நந்துங் கொல்லோ (7)
..........................................
இரவலர்க் கீயும் வள்ளியோ னூடே?" (புறம்-119.)

எனக் கையறுநிலையிற் பாடியுள்ள செய்யுட்களை நோக்கலாம். இவற் றால் மலையுறுவளத்தினை அழகுற விரித்துப்பாடுவதுடன், நம்கவிஞர்

(1) விரும்பியபடி. (2) முதிர்ந்து. (3) வாழ்த்தி. (4) செல்லுவோம். (5) நிச்சயமாக. (6) புதுவருவாயுடையது. (7) கெடுமோ.

பெருமான் ஈசுவரசிருஷ்டியில் உயிர்படைத்திராத இயற்கைப்பொருள்கட்கும் ஆங்காங்கு அமையம்நேர்வுழி, தமது கவீச்வரசிருஷ்டியில் உயிரும் உணர்வும் ஒருங்குவழங்கி, அவற்றோடு தாம் உறவுகலந்து, தமது உள்ளக்கருத்தை உலகுய்ய உதவும் பெருஞ்சிறப்புடையார் என்பது போதரும்.

இனிக் கபிலர்கவித்திறத்தை அவர் மாந்தரைப்பாடும் நிலையில் வைத்து நோக்குமிடத்து அவருடைய செய்யுட்களில் பலவிடங்களில் மெய்ந்நட்பின்சிறப்பு, செய்ந்நன்றிபோற்றல், மகளிர்மெலிவுக்கிரங்கல், உண்மைதுணிந்துரைத்தல் முதலிய உயர்தர ஒழுக்கநெறிகள் மிக்க ஈடுபாட்டுடன் செவ்விதின் விளக்கப்பட்டிருத்தல் காணலாம்.

புறநானூற்றில் வேள்பாரிக்கும் நம் கவிஞர்கோமானுக்குமுள்ள நட்பின் ஒட்பதிட்பங்களை விளக்கும்பாடல்கள் பலவுள. மேலே பாரிநாடு பாரிபுறம்பு இவைமாட்டிரக்கம்பூண்டு இவர் பாடிய செய்யுட்களைப் பிறிதொருபயன்கருதி, ஆண்டு எடுத்துக்காட்டியுள்ளேமெனினும், அவற்றுட்டோன்றும் அநுதாபமனைத்திற்கும் நம் பாவலர் பாரியிடம்வைத்திருந்த பற்றுதலே முதற்காரணமாகும். பாரிபட்டபின்னர், தாமும் உயிர்நீத்துத் தம் நட்புக்கடன்கழிக்கக்கருதிய நம் புலவர்பிரான், அப்பாரிமகளிரைத் தம்முடனிட்டுக்கொண்டு விச்சிக்கோன் இருங்கோவேள் என்னும் இரு சிற்றரசர்களிடம் சென்று,

இவரே.......................................
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்" (புறம்-200.)
.................................... "யானே
தந்தை தோழன்; இவர் என் மகளிர்;
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே.
நீயே.......................................
யான்தர இவரைக் கொள்." (புறம்-201.)

என இரந்துவேண்டுவதை நோக்குங்கால், இவர் தமதுநட்பாளர் இறந்தபின்னரும் அவருக்குகந்தவைசெய்தலினும், ஏழையராய் ஏதுமின்றியிருந்த அந்நட்பாளர்மகளிரை "இவர்என்மகளிர்" எனக்கூறி அவர்பொருட்டிரங்குதலினும் காட்டியுள்ள மனநெகிழ்ச்சி சாலவும் வியக்கற்பாலதே.

அச்சிற்றரசர்கள் அம்மங்கையரை வேண்டாராக, பின்னர் அம் மகளிரைக் கபிலர் பார்ப்பார்ப்படுத்துத் தாம் முன்துணிந்தவாறே வடக்கிருக்கும்போது பாடியது.

"மலைகெழு நாட! மாவண் பாரி!!
கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்
புலந்தனை யாகுவை புரந்த யாண்டே;
பெருந்தகு சிறப்பின் நட்பிற் கொல்லாது
ஒருங்கு வரல்விடா அது தொழிகெனக் கூறி
இனையை யாதலின் நினக்கு மற்றியான்
மேயினே னன்மை யானே, ஆயினும்
இம்மை போலக் காட்டி யும்மை (1)
யிடையில் காட்சி நின்னோடு
உடனுறை வாக்குக உயர்ந்த பாலே" (2) (புறம்-236.)

இதன்கண் தாம்சிறிதளவு காலம்தாழ்த்ததும் பாரிமகளிர்தம் நன்மை கருதியேயெனினும், அதுதானும் தமக்குக்குறையெனவே தம்மன முனையக்கருதி, மறுமையினும் அப்பாரியோடு உடனுறைவேவேண் டியஅருமை அறிஞர்களால் மதிக்கப்படுவதொன்றன்றி, இவ்வளவிற் றென்று எடுத்துரைக்குந் தன்மையதன்று.

மேலேகுறித்தாங்கு பாரிமகளிர்பக்கல் இவர்பாராட்டியகருணை ஒருபுறமிருக்க, "கொடைமடம்படுதலல்லது, படைமடம்படா"னாகிய வையாவிக்கோப்பெரும்பேகன் என்னும் வள்ளல்ஒருவனால் துறக்கப் பட்ட அவன்மனைவிகண்ணகியென்பாள்காரணமாக அவ்வேள்பேகனை, நம் புலவர்,

"யார்கொல் அளியள் (3) தானே? நெருநல் (4)
..................................................
நின்னும்நின் மலையும் பாட இன்னாது
இருத்த (5) கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
குழலினை (6) வதுபோல் அழுதனள் பெரிதே." (புறம்-143.)

(1) மறுபிறப்பு. (2) விதி.
(3) இரங்கத்தக்காள். (4) நேற்று. (5) சொரிந்த. (6) இரங்கியழுவது.

என்றுபாடியிருப்பதைநோக்க, ஏழையர்க்கிரங்கும் இவர்தம் மனக் குழைவு முன்னினும் மாண்புசிறக்கின்றது. இங்ஙனம் அபலைகளுக் காற்றும் அறச்செயலைச்சுட்டியன்றோ, ஸ்ரீராமபிரானும், வாலிவதத் திற்கு நியாயங்கூறுங்கால்,

*"ஈர மாவதும், இற்பிறப் பாவதும்,
வீர மாவதும், கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும், மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ"

எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

இனி, நம்புலவர்பிரான் தம் பாட்டுடைத்தலைவர்முன்னே, அவர் கட்கு நல்லறிவுண்டாகும்வண்ணம் உறுதியுரைகூறியுள்ளவற்றை எடுத்துக்காட்டுவோம். மலையமான்திருமுடிக்காரியென்போன் தன் னிடம்வரும் புலவர்களுக்கு அவரவர்கள்தரமறியாது, தனக்குப் புகழொன்றேகருதி ஈந்துவந்தானாக, அவனைநோக்கி நம் புலவர்,

"வரிசை யறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்!
அதுநன் கறிந்தனை யாயின்,
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே"(புறம்-121.)

என்னும்கட்டுரை இடித்துக்கூறியுள்ளார்.

செல்வக்கடுங்கோவாழியாதன் என்னும் சேர அரசனைப் பதிற் றுப்பத்துப்பாடிச்சென்று கண்ட நம்புலவர், அப்பாடலின் முதற்கண் பாட்டுடைத்தலைவன்புகழைச் சிறிதும் கூறாது, தம்முயிர்த்தோழனா கிய பாரிபுகழைப் பலபடப்பாராட்டி §"அப்பாரிகுணங்கள் நின்பா லும் உளவாக உலகம்சொல்லும்நின்புகழை நின்பாலேதரவந்தேன்" "இரக்கென்றுவந்து சிலபுகழ்ந்துசொல்லுகின்றேனுமல்லேன்; அஃ தன்றி உண்மையொழியப் புகழ்ந்துசொல்லுகின்றேனுமல்லேன்" என் னும்பொருளடங்க,

* கிஷ்கிந்தாகாண்டம், வாலிவதைப்படலம். 99.

§ பதிற்றுப்பத்தின் உரை.

"புலர்ந்த சாந்திற் புலரா ஈகை
மலர்ந்த மார்பின் மாவண் பாரி
...... ..............இரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோன்; அளிக்கென
இரக்கு வாரேன்; எஞ்சிக் கூறேன்;
ஈத்த திரங்கான்; ஈத்தொறு மகிழான்
ஈத்தொறு மாவள் ளியனென நுவலுநின்;
நல்லிசை தரவந் திசினே. *........"

(பதிற்றுப்பத்து-61.)

எனப் பாடியிருக்கும் மனஉறுதியைநோக்க இப்புலவர்பிரான் முகமனியம்புதற்கண்ணும், புனைந்துரை சிறிதும் கூறுர் என்பது தெளியப்பெறும்.

குறுந்தொகையில் (259) தலைவி தோழியைநோக்கிக்கூறும்கூற்றாக,

"ஒல்லை யாயினும் கொல்லை யாயினும்
நீயளந் தறிவை.........வாய் போலப்
பொய்ம்மொழி கூறல்அஃ தெவனோ?
நெஞ்சம் நன்றே நின்வயி னானே.

எனத் தாய்க்கு அறத்தொடுநிற்கக் கருதிய தோழியின் உண்மையை ஒளியாத்தன்மையை நயந்து பாராட்டுவதும் இதனைவற்புறுத்தி, இக்கவிஞர்கோமான் "எல்லாவிளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு" என்னும் பொய்யாமொழிக்கெடுத்துக்காட்டாய், உண்மையே யாண்டும் துணிந்துகூறும் உயர்வுடையாரென்பதை மலையிலக்காக்குகின்றது. இவற்றானன்றோ "பொய்யாநாவிற் கபிலன்," "வாய்மொழிக்கபிலன்," "புலனழுக்கற்ற வந்தணாளன்," "வயங்கு செந்நாவின் ...கபிலன்" என, யாம் முன்னர் வேறிடத்துக் காட்டியாங்கு, அக்காலத்தான்றோரால் இவர் வாய்மைத்திறம்பற்றி மாண்புற மதிக்கப்பெற்றனர்?

இதுகாறும் கபிலர்கவித்திறம் கூறுமுகத்தால், குணமாட்சியும் உடன்கூறவேண்டியதாகவே,அவையிரண்டினையும் இயைத்தியைத்துக்

* வந்தேன்,

கூறிப்போந்தோம். இனிச் சிறப்பாகச் செய்யுணயங்கள் சிலவற்றை மாத்திரம் சுட்டி விளக்குவான் முயல்கின்றாம்.

உவமையம். உண்மைநவிற்சியொன்றேயன்றிப் பிறஅணிகளைப் பொருட்படுத் தாத இப்புலவர்வாக்கில் சில இடங்களில் ஆங்காங்கு மிகவும் அருமை யான உவமைகள் காணப்படுகின்றன. அவ்வுவமை கள் மிகப்பொருத்தமாகஇருத்தலோடு, திருத்த மான நயங்கள் வாய்க்கும்படி செஞ்சொற்களில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் ஆளப்பட்டிருக்கின்றன. குறுந்தொகை யில் தோழிகூற்றாகும்,—

¶வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட! செவ்வியை யாகுமதி;
யாரஃ தறிந்திசி னோரே; சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு
இவளுயிர் *தவச்சிறிது; காமமோ பெரிதே."—(18)

என்னும் பாட்டில் தலைவியின் மென்மைத்தன்மைக்குப் பலாவின்சிறு காம்பையும், அவள்கொண்டுள்ள காதற்பெருக்கிற்குப் பெரிய பலாப் பழத்தையும் உவமித்திருப்பதை நுணுகிநோக்குங்கால், இவ்வரியஉவ மைவாயிலாகத் தலைவியின்மென்மைப்பாடும், அவள்மனத்துள்ள மைய லின்வளர்ச்சியும், அம்மையலைத் தாங்கலாற்றாது அவளடையுந்தளர்ச் சியும் எவ்வளவு அழகுபெற விளக்கப்பட்டிருக்கின்றன! இவ்வுவமை நயத்தோடொட்டிப் பாட்டுடைத்தலைவனுக்கு வழங்கியுள்ள அடை மொழிகளின் ஆற்றலை உற்றுநோக்குவாம். தலைவன் எத்தகையநாட் டுக்கதிபன்? மூங்கில்வேலியோடுகூடிய (வேரிற்பழுக்கும்) வேர்ப்பலாக் களையுடைய மலைச்சாரல்நாட்டுக்குத் தலைவன். அத்தகையநாடுடை யானுக்கன்றோ சிறுகோட்டிற் பெரும்பழந்தொங்கும்செய்தி நன்கு தெரிந்துளதாகும். ஆதலின் அவனைமுன்னிலைப்படுத்திஅவ்வுவமையை உபயோகித்ததன் பயனும் நயனும் சாலவும் சிறப்புறுகின்றன என்பதுவெளிப்படை. இவளுடல் என்னாது 'இவளுயிர்' என்பதும், சிறிது என்பதோடமையாது 'தவச்சிறிது' என்பதும், 'உயிரோசிறிது,

¶ மூங்கில். * மிகவும்.

காமமோபெரிது' என்றுகூறியதோழி, தலைவனை 'இதை நீ அறியவில்லையே' என்று நோதற்குப்பதிலாக, 'யார் அஃதறிந்தவர் ? என்று அலக்ஷியமாகக் கூறுவதுபோலத் தைக்கச்சொல்லும் தகவுடைமையும், நீ க்ஷேமமாயிரு (செவ்வியையாகுமதி) என்று முடிக்கும் அழகும் நம் புலவர்பெருமானுடைய சொற்றொடைநயங்களைத் தெற்றென விளக்குவனவாகும்.

குறிஞ்சிப்பாட்டில் கற்பாறைமீது ஒரு சுனையில் தேங்கிய மா, பலாமுதலியவற்றின் தேறலைமாந்தித் தள்ளாடித்தள்ளாடியாடும் மயிலுக்கு, (திருவிழாக்காலத்தில்) ஓர் அகன்றஇடத்தில் கழாய்க்கயிற்றிலேறி, (பக்கவாத்தியங்களுக்கேற்ப) ஆடுதலால் தளர்ச்சியடையும் கழைக்கூத்தியை உவமைகூறுதல் மிகவும் அழகாகவும் அமைவுடைத்தாகவும் காணப்படுகிறதன்றோ ?

சிற்சில இடங்களில் உவமங்கூறுவதுபோல் தொடங்கி, உவமத்தின்இழிவைச் சுட்டிக்காட்டி, அதனால் பொருளின்உயர்வைச்சிறப்பித்தல் நம்கவிஞருடைய கவிமாட்சிகளுள் ஒன்றாகும். உதாரணமாக, சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதனைப்பாடிய புறப்பாட்டில்,

"........................ ...........சேரலாதனை
யாங்கனம் ஒத்தியோ? வீங்குசெலல் மண்டிலம்!
பொழுதென வரைதி; புறக்கொடுத் திருத்தி;
மாறி வருதி; மலைமறைந் தொளித்தி;
அகலிரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே." (புறம் - 8.)

எனச் சூரியமண்டலத்திற்குப் பகலென்னும்வரையறை, சந்திரனுக்கிரவிற்புறங்கொடுத்தல், மாறிமாறிவருதல், மேருவிற்குப்பின்னொளித்தல், ஆகாயத்திலும் பலகதிர்பரப்பியும் பகலொன்றையேவிளக்குதல் இக் குறைகள் இருத்தலால், அது சேரலாதனை எவ்வாறு நிகர்க்கும்? ஒருவாற்றானும் நிகராதென இழித்துக்கூறி, அச்சேரன்புகழைச் சிறப்பித்ததின்செவ்வி மிகப்பாராட்டற்பாலது.

அன்றியும், குறிஞ்சிக்கலியில், தலைவி தோழிக்குத்தலைவன் தன்னிடம்,

"...............................வந்து
நுதலும் முகமும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ,
ஐதேய்ந் தன்று பிறையு மன்று;
மைதீர்ந் தன்று மதியு மன்று;
வேயமன் றன்று; மலையு மன்று;
பூவமன் றன்று; சுனையு மன்று;
மெல்ல இயலும் மயிலு மன்று;
சொல்லத் தளரும் கிளியு மன்று;
எனவாங்கு
அனையன பலபா ராட்டி.................." (குறிஞ்சிக்கலி-19.)

நின்றதைக் கூறுமிடத்து, அவன் தன்தலைவியின் *"நுதலையும் முகத்தையும் தோளையும் கண்ணையும் சாயலையும் சொல்லையும் நோக்காநின்று, உவமையைக்கூறநினைந்து,நுதல் வியப்புடைத்தாய்த் தேய்ந்ததாயினும் பிறையுமன்று; முகம் மறுவற்றதாயினும் மதியுமன்று; தோள் வேயின்தன்மைநெருங்கிற்று; அதுபிறக்குமிடமன்று; கண் பூவின்தன்மைநெருங்கிற்று, அதுபிறக்குமிடமன்று; சாயலிருந்தபடி மெத்தெனநடக்கும் மயிலுமன்று; சொல்லுச் சொல்லத்தளரும் கிளியுமன்று" என அவ்வப்பொருளின் அழகுக்கேற்ப உவமைகள்அமையாததன்மையைச்சுட்டி, அதனால் அவ்வுறுப்புக்களின் சிறப்பாடு புலப்படுத்துவதும் அத்தன்மையதேயாம். இஃதன்றியும் ஈண்டு அடுக்குத்தொடைகளின் ஆற்றலும் அழகும் பாராட்டற்குரியனவாம்.

இவையன்றி, இப்புலவர்பெருந்தகையார் எடுத்தாளும் உவமைக்கண்ணும், தொடுத்தாளும் அடைமொழிக்கண்ணும் அகப்பொருட்டுறைக்குப் பொருந்துவனவாய உள்ளுறையுவமம் பற்பலஇடங்களிற் பொதிந்துள. இச்சிறப்பு நச்சினார்க்கினியர்போன்ற உரையாசிரியர்களால் விரித்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கோர் எடுத்துக்காட்டாக, மேலே குறிஞ்சிப்பாட்டில் மயிலுக்குக் கழைக்கூத்தியைநேருரைத்த அவ்வுவமையில்; பாறையைஊராகவும், சுனையைத்தலைவன்குடியாகவும், தேறலைத்தலைவனாகவும், அதனைஉண்டமயிலை அவனோடு இன்

* கலித்தொகையுரை.

பம்நுகர்ந்த தலைவியாகவும், மயிலின் ஆடலாற்றாத்தன்மையைத் தலைவி மெலிவுற்றதன்மையாகவும் உள்ளுறையுவமம் கொள்ளக்கிடக்கின்றது. ஏனையபலஇடங்களிலும் பற்பல உள்ளுறையுவமங்கள் சான்றோருரை கொண்டு நுண்ணிதின் ஆய்ந்தறியற்பாலனவாம்.

இவ்வுவமநயத்தினை இம்மட்டோடு நிறுத்தி எஞ்சியநயங்களைச் சிறிதுஆராய்வோம். தொகைநூல்களிற்சேர்ந்துளபாக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நயம் வாய்ந்ததே. அதிலும், கபிலரோமிகச்சிறந்த கவிசிரேஷ்டர்; அகம்புறமென்னும் இருபொருளிலும் ஏற்றபெற்றி எழிலுறப்பாடும் ஏற்றம்வாய்ந்தவர். இத்தகைய கவிஞர்கோமான் கவித்திறத்தைத் தனித்தனிபாராட்ட யாம்தரமுடையேமல்லேம். தரமுடையேமெனினும், அம்முயற்சி மிகவிரிந்து, அளவிற்பெருகுவதாகும். ஆதலின் இதுகாறும் இயம்பியனபோக, எஞ்சியவற்றைப் பொதுப்பட இரண்டோரினத்திற்சேர்த்துவிளக்கி இவ்வியாசத்தைப் பூர்த்திசெய்யமுயல்வோம்.

தலைவிநயம் குறித்தல்.

தலைவியின்நிலைமைக்குத்தக்கபடி ஆங்காங்கு அவள் உள்ளக் கருத்தை நம்புலவர்பிரான் மிகச்சுருக்கமாகவெளிப் படுத்தி, அதன்கண் அதிநுட்பமானபொருளை உணர் தொறும்உணர்தொறும் உணர்வோருள்ளந்தெவிட் டாது கவிச்சுவை நுகரும்படி பாடும் அற்புதஆற்றலுடையவர்.

"...............பெருங்கல்நாடன்
இனிய னாகலின் இனத் தியன்ற
இன்னா மையினு மினிதோ
இனிதெனப் படூஉம் புத்தே ளுடே." (குறுந்தொகை-288.)

இதில் தனக்கினியகாதலன்காரணமாக உண்டாயநோயாதலின், அந்நோயைவிட யாரும்இனிதெனக்கூறும் தேவருலகு இனிதாகுமா? என்றுகேட்பதில் அமைந்துள்ள ரஸமும்,

"......................சாரலவர் நாட்டுக்
குன்றம் நோக்கினேன் தோழி
பண்டை யற்றோ?கண்டிசின் நுதலே," (குறுந்தொகை-249.)

என்பதில் தலைவனது மலையைநோக்கியதக்ஷணமே தனதுநெற்றியின் (முகத்தின்என்றபடி) நிறம் வேறுபாடுற்றதோ என்று உசாவியதிற் பொதிந்துள்ள நுண்மையும்,

"யாமெங் காமந் தாங்கவும் தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி
..........................................
குன்ற நாடற் கண்டஎங் கண்ணே." (குறுந்தொகை-241.)

எனுங்கவியில், தானடக்கினும், தன்னிற் "சிறந்தஉறுப்பில்லை" எனத் தகும் கண்கள், நோக்கின்பம்பெற்றவைஆதலின், தலைவன் பிரிவுத் துன்பத்துக்காற்றாது, அழுதலைச்செய்தன என்பதிலுள்ள நயமும், ஆகிய இத்தகைய பொருளினிமைகளோடு, அவ்வத்தொடர்மொழி களிலுள்ள செஞ்சொற்புணர்த்தல், சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல் முதலிய சொல்லினிமைகளும்சேர்ந்து "ஆயுந்தொறுந்தொறும்" மிக வுயர்ந்த கல்வியின்பம்பயக்குந் தன்மையனவன்றோ?

இனித் தலைவன் செயல்இயலாதியவற்றைப் பாராட்டுமிடத்தும் இன்னோரன்ன உயர்நயம்பலவும் இப்புலவர்பெருமான் செய்யுட்களிற் பரக்கக்காணலாம்.

தலைவன் சிறப் புரைத்தல்

ஐங்குறுநூற்றில், தன்கண்ணைப்பொத்திய காத லியைநோக்கிக் காதலன்,

"சிலம்புகமழ் காந்தள் நறுங்குலை யன்ன
நலம்பெறு கையின்என் கண்புதைத் தோயே!
..........................பணைத்தோள்
தோகை மாட்சிய மடந்தை!
நீயல துளரோஎன் னெஞ்சமர்ந் தோரே." (293)

என்று கூறுவதில் தன்னன்பைப் புலப்படுத்திய அழகும், கலித்தொகையில்,

"ஒன்று, இரப்பான்போல் எளிவந்துஞ் சொல்லும்; உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்;
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கட் டோன்றும் அடக்கமு முடையன்;

இல்லோர் புன்கண் ஈகையில் தணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையு முடையன்;
அன்ன னொருவன்தன் ஆண்டகைவிட் டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ" (குறிஞ்சிக்கலி-11.)

எனத் தோழியிடம் தலைவி தனதன்பன்மாட்டுக்காணப்படும் முரண் பாட்டுநலத்தை வருணித்துள்ளது எத்துணைச்சிறப்புடையது? உலகம் புரக்கும் பெருமையுடையனும்; இவளிடம் எளிவந்துஇரக்கும் சொல் லுமுடையனும். நல்லவர்களிடத்து ஆசிரியரிடம்போன்று அடக்க முடையனும்; இல்லாதவரிடத்து அவர் நல்குரவை வாட்டியோட்டும் வலிமையுடையனும். அத்தகையாளன் தனதுஆளுந்தன்மையைவிட்டு இவளிடம் சிலகேட்கின்றானும். இவையனைத்தும் எவ்வளவுஉண்மை யாகவும், விளக்கமாகவும் தலைவன்தலைவியர் மனநிலையை விரித்துக் காட்டுகின்றன! இதுவன்றோ உத்தமகவிகளின் சிறப்பு!

அகப்பொருட்சார்பாகக்கூறியவை நிற்க. இனிச் சமயோசித மாய்அமைந்துள்ள சிலபாக்களுட் பொதிதருநயங்களில் ஒருசிறிது பாராட்டி இவ்வாராய்ச்சியைப் பூர்த்திசெய்வோம்.

சேரமான் செல்வக்கடுங்கோவாழியாதன் ஒருகால் கபிலர்கை களைப்பற்றி, "நுங்கை மெல்லியவாம்" என்றபோது, அவர் அச்சேரன் கை வலியவாதற்கும் தம்மைப்போன்று அவனைப்பாடுவோர்கை மெலிய வாதற்கும் காரணங்கூறுகிறார்:—

"கடுங்கண்ண கொல்களிற்றால்
..............................
முன்புதுரந்து சமந்தாங்கவும்,
..............................
நிமிர்பரிய மாதாங்கவும்,
..............................
சாப நோன்ஞாண் வடுக்கொள வழங்கவும்
பரிசிலர்க் கருங்கலம் நல்கவும் குரிசில்!
வலிய வாகும்நின் தாள்தோய் தடக்கை
..............................
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது

பிறிதுதொழி லறியா வாகலி னன்று
மெல்லிய .....................
.....................நிற்பாடுநர்கையே." (புறம்-14.)

இதில் "ஒன்னார்த்தெறலும் உவந்தாரையாக்கலும்" பன்முறையும் பயின்றுபயின்று அரசன் கை வன்மைகொண்டானென்றும், அவனைப் பாடுபவர், நன்காதரிக்கப்படுதலின் இன்னுணவு உண்டுஉண்டு வேறு செயலறியாராய்த் தம்கை மென்மைபெறப்பெற்றார் என்றும் பாடியதி லுள்ளபொருணயமும் "உண்டுவருந்துதொழிலல்லது" என்பதில் வருந்து என்னும் சொற்பயனும், 'நங்கைமெல்லிய' என்றானுக்கு 'நிற் பாடுநர்கை'என மாற்றுரைகூறியதில் தோற்றும் ஆற்றலும் உய்த்துண ரற்பாலன.

மற்றும் மலையமான்திருமுடிக்காரியைப் பாடியபோது 'நினது நாடு பார்ப்பாருடையது; பொருள்........பரிசிலருடையது நினக்கு நின்மனைவி தோள்மாத்திரையல்லது உரியதொன்றுமில்லை. இங்ஙன மாகவும் நீ செருக்குறல் என்னே! என்றுபொருள்பட,

"நின்னாடே
அழல்புறந் தரூஉம் அந்தண ரதுவே;
.........................கூழே* நின்குடி
வாழ்த்தினர் வரூஉம் இரவல ரதுவே;
வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலைநீ பெருமிதத் தையே." (புறம்-122.)

என்றுபாடியதில் பழிப்பதுபோற்புகழ்கூறிய நன்னயமும், இவ்வாறே 'பாரியின் புகழைப் பாவாணர் பாராட்டல் எற்றுக்கு? உலகம்புரத் தற்குப் பாரியன்றியேயும் மாரியுமுண்டன்றோ? என்னுங் கருத்தற,

"பாரி பாரி யென்று பலவேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி யொருவனு மல்லன்;
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே." (புறம்-107.)

* பொருள்.

என்னும் இப்பாடலில்,மாரியின்புகழ்கூறுவதுபோலப் பாரியின்ஒப்புயர் வற்ற வள்ளன்மையைப்பாராட்டும் இன்னயமும், இவைபோன்ற பொருணயம், தொடைநயம், சொன்னயம் முதலிய பன்னயமும் கபிலர்கவிகளில் மல்கிவிளங்குதல் கற்றறிந்தோரால் உற்றுநோக்கிக்கொள்ளற்பாலனவாமாதலால் அவற்றை ஈண்டு விரித்துக்கொண்டேபோந்தால் மிகப்பெருகுமென்றஞ்சி இம்மட்டோடு நிறுத்துகின்றேம்.

இதுகாறுங் கூறியவாற்றால், கபிலர் ஒரு சிறந்தபுலவர்கோமான் என்பதும்,இவர் நூலினடையானன்றியும் சிலநடையாலும் பெருஞ்சுட்டுக்குரியவரென்பதும், இவர்தம்கவிகளில், குறிஞ்சிவளம்பல கூர்ந்து விளக்கலும், இயற்கைப்பொருள்களோடு அநுதாபம் காட்டலும், நட்பாட்சி, நன்றியறிதல், மகளிர்க்கிரங்கல், வாய்மைமதித்தல் முதலிய அறச்செயல்களைத் தம்மனுபவத்தோடொட்டி மிக அழகாகப்பாடுதலும், உவமங்கூறலிற் பற்பலநயங்கள் அமைத்தலும், தலைவன் தலைவியர் உள்ளத்துணர்வினை நுண்பொருளவாகச் சிலசொல்லிப் பலவிளங்க வைத்தலும், சமயோசிதமாகப் பாட்டுடைத்தலைவர்புகழைச் சொற்பொருணயம்படச் சுட்டியுரைத்தலும், ஏனையபிறநலங்களும் செறியப் பாடும் பெருமையுடையாரென்பதும், ஒருவாறு தொகுத்துரைக்கப் பட்டன.

இவர் பத்துப்பாட்டிற் குறிஞ்சிப்பாட்டை, ஆரியஅரசன் பிரகதத்தன் என்பானுக்குத் தமிழறிவுறுத்தற்கென்றே பாடினாராதலின், இப்பெருந்தகையாளர் தமது அரும்புலமைக்கேற்பப் பெரும்பாஷாபிமானமுங்கொண்ட புண்ணியசீலரென்பதும் போதரும். இப்புலவர் பிரான்புகழ் "குன்றிற்கார்த்திகைவிளக்கிட்டன்ன" சிறக்கமுடையதாகும். தமிழ்மக்கள் இவ்வுத்தமகவியின்செய்யுட்களிற்காணப்படும் சொற்பொருணயங்களைச்சுவைத்துச்சுவைத்து நற்பயனெய்துவாராக.

வே. முத்துஸாமி ஐயன்,
எம். ஏ., எல். டி.,
மதுரை.

# உரை நுட்பம்.

நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் நமக்குச்செய்துவைத்திருக்கும் உதவிகள் அளவிடற்பாலவல்ல. அன்னாருரைகளிருந்திலவாயின் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, திருக்குறள் முதலியவற்றின் நுண்பொருள்களை நம்மனோர் அறிந்து அநுபவித்தல் எளிதன்று. பண்டைச்செந்தமிழ் நூல்கள்பலவற்றைக் காலவயத்தாலிழந்து நம்பூர்வீகநிலைமையை முற்றும் விளக்கமுற அறியமுடியாமலிருக்கிற நாம் தொல்காப்பியம் முதலிய மணிவிளக்குக்களையும் இழந்துமுழு இருளிற்கிடந்ததடமொருவண்ணம் அவையிற்றைப்போற்றியளித்த பெருவண்மையுடையோர் அவ்வுரையாளர்களேஎன்பதி லையமின்று. எனினும் உரையாளர்களெல்லாம் நூலாசிரியர்கள் காலத்திற்கு மிகப்பிற்பட்டகாலத்தவரேயாகலின் நூலாசிரியரின்கருத்துக்களை ஓரோவழி அறியமுடியாதுமயங்குதலும், தம் காலத்துவழக்குக்களை நூலியற்றியகாலத்துவழக்காகத் துணிந்தேற்றிக்கூறுதலும் நிகழக்கூடியவே. ஒவ்வொருநூலுக்குப் பலப்பலவுரைகள் ஏற்படக்காரணமும் அதுவே. ஆயின், அவ்வுரைகள் மிக்க திட்பநுட்பமமைந்தனவாய் அறிதற்கரியனவாயுள்ளனவென்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்திற்கொள்ளவேண்டும். அவை அங்ஙனம் அறிதற்கரியவாயிருத்தல்பற்றியே அவ்வுரைக்குப் பொருள்காணமாட்டாத பலர் உரைப்பாடத்தையும் பலபடியாகத்திரித்திருக்கின்றனர். சிலர் பழையவுரைகளைச்சோதித்து அவற்றின்பொருளைத்திரிபுபடவுணர்ந்து உரையாளர்மேற்பழிசுமத்தி நிந்தித்தெழுதியுமிருக்கின்றனர். அவற்றிற் கொவ்வோருதாரணம் எடுத்துக்காட்டுதும். அது, பதிப்பித்தவர்களையாவது ஆராய்ச்சிசெய்தவர்களையாவது சிறிதேனுங்குறைகூறுங் கருத்தினாலும், அவர்கள்பால்மதிப்பின்மையாலுமன்று. அவர்கள்பால் எமக்குப்பெருமதிப்புண்டு. அவர்கள்செய்திருக்கும்உதவிகளைப்பாராட்டுதல் எமக்கு முதற்கடமையன்றோ? பழையவுரைகளைக்கற்போர் அவற்றை நுணுகியாராய்ந்து அவற்றின் பொருள்காணவேண்டுமென்பது புலப்படுத்தற்கே இஃதெழுதுகின்றோம்.

திருக்குறள், காமத்துப்பால், பொழுதுகண்டிரங்கல் என்னும் அதிகாரத்தில் ஒன்பதாம்பாட்டு,

"பதிமருண்டுபைதலுழக்குமதிமருண்டு
மாலைபடர்தரும்போழ்து,"—என்பது.

இது தலைவிகூற்று. இப்பாட்டினை, 'மதிமருண்டுமாலைபடர்தரும் போழ்து பதிமருண்டுபைதலுழக்கும்'- என்று அந்நுவயித்துக்கொண் டும், 'மதிமருண்டு' என்பதனை 'மதிமருள' எனத்திரித்துக்கொண்டும் பரிமேலழகர் பொருள்கூறுகின்றார். அவர்கூறும்பொருள்,—"இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கிநோயுழந்தேன். இனிக் கண்டாரும்மதி மருளும்வகை மாலைவரும்பொழுது இப்பதியெல்லாம் மயங்கிநோயுழக் கும்"—என்பது. இங்கு 'பதி' என்பதற்கு அவர்கருதியபொருள் 'ஊரிலுள்ளார்' என்பதாகும். இனி, அவ்வுரையாளர் பிறர்கொள்கை யாக எடுத்துக்காட்டியவுரையொன்றுண்டு. அவ்வுரை, யாம் பார்த்த புத்தகங்களில் பின்வருமாறு பலபடியாகத்திரிந்துளது.—

1. மாலைமயங்கிவரும்போழ்தெனமதிநிலைகலங்கிநோயுழக்குமென் றுரைப்பாருமுளர்" திருக்குறள் நாவலர்பதிப்பில் 4, 7 - ஆம் பதிப்புக்கள்.
2. "மாலைமயங்கிவரும் போழ்து என்பதி நிலைகலங்கி..........." நாவலர் - 8 - ஆம் பதிப்பு.
3. "மாலைமயங்கிவரும்போழ்து என்பதி மதிநிலைகலங்கி........." மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் அச்சான கையடக்கப்புத்தகம்.
4. "......போழ்தெனமதி நிலை கலங்கி" கோ. வடிவேலுசெட்டி யார்பதிப்பு.
5. "......பொழுது பதிமதிநிலைகலங்கி......" ஷெயார் தெளி பொருள்விளக்கவுரை.

இங்கெடுத்துக்காட்டிய இத்தனை பதிப்புக்களிலும் உண்மைப் பாடம் வெளிவராதிருப்பதே நமக்கு வியப்பைத்தருகின்றது.

நாவலர் 4, 7-ஆம்பதிப்புக்களில் உள்ளபாடத்தில் 'போழ்தென' என்றிருப்பதை 'போழ்தென்' என்று திருத்திக்கொண்டால் பொருள் பொருத்தமுறுகின்றது. அதுவே உண்மைப்பாடமும் ஆம். ஓர் புள்ளியில்லாதகுறையால் புலவர்பலரும் இங்ஙனம் மயங்குவாராயி

னர். ஏனைப்பாடங்களின்பொருத்தமின்மையை மீண்டுவிளக்கலுறின் விரியுமென்றுகருதி விடுக்கின்றாம். "மதி பதிமருண்டு" எனப் பொருள் கூறுக. 'பதி' என்பது இப்பொருள்பயத்தலை, "மதியுமடந்தைமுகனு மறியா—பதியிற்கலங்கியமீன்" (திருக்குறள்-112-ஆம் அதிகாரம்-6.) என்பதானும் அறிக.

இனி, "தாழ்காவி, னவிர்சடை முனிவ ரங்கி வேட்கு, மாவுதி நறும்புகை முனைஇக் குயிறம், மாயிரும் பெடையோ டிரியல் போகிப், பூதங் காக்கும் புகலருங் கடிநகர்த், தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கும்" என்னும் பட்டினப்பாலை (53-58) அடிகட்கு ஆசிரியர் நச்சினார்க்கினியரெழுதியபொருள் பின்வருமாறு:—

"விளங்குகின்ற சடையினையுடைய இருடிகள் தீயின்கண்ணே வேட்டலைச்செய்யும் நெய்முதலியவற்றின் நறியபுகையை வெறுத்துக் குயில்கள் தம்முடைய கருமையையும்பெருமையையுமுடையபேடைகளுடனே கெடுதலையுடையவாய்நீங்கிப்போய், பூதங்கள் வாசலிலே காத்திருக்கும் புகற்கரிய அச்சத்தையுடைய காளிகோட்டத்திடத்திற் கல்லைத்தின்னும் அழகியபுறவுகளுடனே குடியிருப்பாகத்தங்கும் இளமரக்காவினையும்" "முனிவரைத்தன்னிடத்தேகொண்டிருத்தலிற் காக்காரணமாயிற்று" 'துச்சிற்சேக்கும்தாழ்காவின்' என்று அந்நுவயிக்க. சோலையின்கணிருந்தகுயில்கள் அங்குள்ளமுனிவர் வேட்கும் வேள்விப்புகையை வெறுத்தலால் அதினீங்கிப்போய்க் காளிகோட்டத்திடத்திற் புறாக்களுடனே தங்கியிருக்கும்: என்பதே அவருரையின்பொருளாகும். 'தங்கும் இளமரக்கா' என்றிருத்தலால், புறாக்கள் காவின்கட்டங்கும்' என்றுகொண்டு பிறர் மயங்குவரோ என்று கருதியே அங்ஙனம் மயங்காமைப்பொருட்டு "முனிவரைத்தன்னிடத்தேகொண்டிருத்தலிற் காக்காரணமாயிற்று என்று விளக்கமும் எழுதினார். எனவே "தங்கும்கா = தங்குதற்குக்காரணமானகா" என்று பொருள் வெளிப்படையாயிற்று. பெயரெச்சம்காரணப்பெயர்கொண்டுமுடிந்தது. ஆசிரியர் தாம்கருதியபொருளை இங்ஙனம் நன்கு விளக்கியிருப்பவும், பிறர் அதனுண்மைகாணாது மயங்குவாராயினர்.

பட்டினப்பாலையாராய்ச்சி என்னும் புத்தகத்து 70-ஆம் பக்கத்தில் பின்வருமாறு வரையப்பட்டுள்ளது:—

"(53-58) 'முனிவர்வேட்கும்புகையைவெறுத்தலாற் குயில்கள் சோலையைவிட்டுக் காளிகோட்டத்திற்போய்த் தூதுணம்புறாக்களோ டும் ஒருபுறத்தேதங்கும்' என நேரே பொருள்படுதலை விடுத்து நச்சி னார்க்கினியர் காளிகோட்டத்தைப் புறாக்களுக்குவிசேடணமாக்கிப் பின் அப்புறாக்களோடுங்குயில்கள் காவிலேசென்றிருக்குமெனக் காவுட னேசேர்த்துப் பொருளுரைக்கின்றார். அங்ஙனம் பொருளுரைப்பின் முனிவர்வேள்விவேட்குமிடம் இதுவென்பது பெறப்படாமையானும், குயில்கள் எவ்விடத்தைவிட்டு எங்குபோயிருந்தனவென்று வினவு வார்க்கு இறுக்கலாகாமையானும் அஃதுரையன்றெனமறுக்க. தவப் பள்ளிகளுள்ளகாவிலே முனிவர் வேட்கின்றாரென்றும், அங்கெழும் புகையைவெறுத்து அச்சோலையைநீங்கிப்போய்க் குயில்கள் காளி கோட்டத்திற்றங்குகின்றனவென்றும் பொருள்கூறுதலே பொருத்த முடைத்தாதல்காண்க."

இவ்விரண்டுரையையுங்காண்பவர்கள், ஆராய்ச்சியுரையாளர் மூல பாடத்திற்குப்பொருள் நன்கு அறிந்துகொண்டுளார்: எனினும் அப் பொருள்படவேயெழுதியுள்ள நச்சினார்க்கினியரின் உரைநுட்பத்தை யறியமாட்டாது இடர்ப்பட்டு மறுத்தலை மேற்கொண்டனர்: என்று உணர்வார்களாக. இங்ஙனம் ஒரோவழிமறுப்படவெழுதியிருப்பினும் ஆராய்ச்சியுரையாற் பெரிதும்பயனுண்டென்பதே எமது கருத்து.

பழைய நூலுரைகளின் பொருளையறியமாட்டாது பின்னுளோர் வழுப்பட எழுதியும், பாடந்திரித்துமுள்ளன எண்ணிறந்தன. சான்று மாத்திரையாக ஈண்டு இரண்டுகாட்டப்பட்டன. நுண்மாணுழைபுலம் உடையோர் ஆராய்ந்து கற்றுப்பயனுறுக.

மு. வேங்கடசாமி நாட்டார்.

ஸ்ரீ:

# வஞ்சிமா நகர்ப் பெயர்க்காரணம்.

---

தமிழிற்குத் திலகம்போலவிளங்கும் இச்செந்தமிழ் வாயிலாக வஞ்சிமாநகர் என்பதைப்பற்றி நீண்ட ஆராய்ச்சிகள் நிகழ்ப்பெற்று வருகின்றனஎன்பது செந்தமிழபிமானிகள் யாவர்க்கும்புலனும். அவ் வாராய்ச்சிகளுள் வஞ்சிஎன்று சேரனகர்க்குப்பெயர்வந்ததைப்பற்றிய ஆராய்ச்சியும் ஒன்றாம்.

இப்பெருவிஷயத்தைப்பற்றியாராய்ச்சிசெய்யும் அறிவின்மிக்க ஆன்றோர்கள் வஞ்சிஎன்பதற்கு அநேகம்காரணங்களை முன்னூற்பிர மாணங்கள்கொண்டுகாட்டினர். அதாவது, வஞ்சுளாரணியம் என்னும் வடமொழிப்பெயர் தமிழில் வஞ்சிஎன்றுவந்ததாகக்கூறுவர். வஞ்சுளம் என்னும்சொல் ஓர்வகைமரத்திற்கும் கொடிக்கும்பெயராம்; எனவே அவைமிகுதியாகக்காணப்படும்காடு வஞ்சுளாரண்ணியம்என்பதாம் என் றும், வஞ்சுளாரணியம்என்பதை வஞ்சுளாஎன ஆகாராந்தப்பதமாகப் பிரித்து அப்பதம், மிகுதியாகப்பால்கறக்கும்பசுவைக்குறிக்கும் என்று கொண்டு அப்பசுக்கள்நிறைந்த காடுஎன்றும் கூறுவர். ஓர்ஊருக்குப் பலகாரணங்கள் இருப்பதுஇயல்பே. அதற்கொப்ப வஞ்சி என்பதற்கு மேலே பலகாரணங்கள் கூறப்பட்டன. மேலேகூறப்பட்ட காரணங்க ளன்றியும் இன்னும் ஒருசிறந்தகாரணம் கூறலாம் என்று எளியேன் புன்மதிக்குப்புலனாகின்றது. அது:—

கொங்கனாடு மலையமானாடு காகந்தி என்று நாடும் ஊரும் தம்மை யாள்வோராலும் ஹஸ்தினாபுரிஎன்று நிருமித்தோராலும்பெயர்பெற்று நிற்பதுகண்கூடே. அவைபோலவே வஞ்சன்என்னும் அரசனால் சிறப் பாகஆளப்பட்டது அல்லது காணப்பட்டது வஞ்சிஎன்னும்நகராம் என்றுகொள்வதே தகுதி, என்பதாம்.

மேலேகூறியவாறு வஞ்சன்என்பவன் நகரம் வஞ்சிஎன்று கொள்ளுமிடத்து அவ்வரசன்யாவன்? அவன்பண்டைநூல்களால் அறியப்பட்டவனா? என்னும்வினாக்கள் நிகழலாம். அவற்றையாராய் வாம். அவ்வரசன் சேரர்மரபில்உதித்தவருள்ஒருவன். அவன் புலவர்

பாடும் புகழுடையோன். மிக்கவீரம்பொருந்தியவன். பரிசிலர்க்குக் கொடுக்குங்கொடையுமுடையோன். அவ்வரசனைத் திருத்தாமனார்என்னும்புலவர் பெருந்தகை,

"மதிநிலாக் கரப்ப வெள்ளி யேர்தர
வகைமா ணல்விற.................
பொறிமயிர் வாரணம் பொழுதறிந் தியம்பப்
பொய்கைப் பூமுகை மலரப் பாணர்
கைவல் சீறியாழ் கடனறிந் தியக்க
விரவுப் புறம்பெற்ற வேம வைகறைப்
பரிசிலர் விசையெ.............
வரிசையி னிறுத்த வாய்மொழி வஞ்ச
னசைவர் குறுகி னல்லது பகைவர்க்குப்
புலியினை மடிந்த கல்லளை போலத்
துன்னல் போகிய பெரும்பெயர் மூதூர்
மதியத் தன்னவென்..............றுகுடாரி
யிரவுரை நெடுவா ரிப்ப வட்டித்
துள்ளி வருநர் கொள்கல நிறைப்போய்
தள்ளா நிலையை யாகிய ரெமக்கென
வென்வர வறீஇய சிறிதிற்குப் பெரிதுவந்து
விரும்பிய முகத்த னாகி யென்னரைத்
திரும்புடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்கு துகிலுடீஇ
யழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல்காண் டேற னிறைய வாக்கி
யானுண வருள லன்றியுந் தானுண்
மண்டை யகண்ட மான்வறைக் கருனைக்
கொக்குகிர் நிமிர லொக்க லார
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்வரு மழாஅற மாரமொடு
புரையோன் மேனிப் பூத்தசல..............
முரைசெல வருளி யோனே
.................அருவிப் பாயற்கோவே.

(398) என்னும் புறப்பாட்டால் அவனது வீரம் கொடைத்திறம் முதலியன நன்குவிளங்குமாறு பாடியிருப்பதால் அவ்வஞ்சன் என்னும் சேரன் தன்மையினை நன்கு தெரிந்துகொள்ளலாம். மேலேகூறிய புறப் பாட்டின் அடிகளிற் சிலசிதைந்திருப்பதால் பாடலின்பொருள்முழுதும் நமக்குநன்குபுலப்படவில்லை. ஆயினும் எடுத்துக்கொண்டபொருளுக்கு அப்பாடலின் சிலவடிகள் பெருஞ்சாதகமாயிருப்பதை ஆன்றோர்கள் அறிந்துகொள்வாராக.

எனவே சேரமான் வஞ்சன்என்னும்அரசன் இந்நகரை முதன் முதல் சேரனாட்டிற்குத்தலைநகராகக்கொண்டு ஆண்டிருந்தல்வேண்டும் என்று ஊகித்தறியலாம். அக்காரணத்தால் அந்நகரம் வஞ்சியென்று பெயர்பெற்றதுபோலும்.

சு. ஸ்ரீநிவாசையங்கார்

---

## வினாத்தொடர்.

---

செந்தமிழ்ப் புலமைதிகழும் சீரியர்களே!

நமது தாய்மொழிப்பயிற்சியிற் பேரவாவுடைய எனக்குத் தக்க ஆசிரியருதவி வாய்க்கும்பேறின்மையால் ஆங்காங்குச்சிற்சில ஐயம் அறியாமைகள் தோன்றுகின்றன. அவை எல்லாவற்றையும் இச்செந் தமிழ்வாயிலாக வெளியிட்டு இதன் இடச்சிறப்பையும் உங்கள் காலச் சிறப்பையும் குறைப்பது தகுதியாகாமை அறிவேன். ஆயினும் இன்றி யமையாச்சிலவற்றையாவது இங்கே வெளியிட்டு உண்மையறிந்து கொள்ளும்படி அருள்புரிய நமது செந்தமிழ்ப்பத்திராதிபர் அவர்களை யுள்ளிட்ட உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

### க. இலக்கணம்.

#### நன்னூல்.

க. ஆசிரியவசனம் மேற்கோள் என்பனவற்றொடுபொருளொக்கும் சொற்றொடர் பழஞ்சூத்திரத்தின் கோள் என்பதா? பழஞ்சூத் திரம் என்பதா ? இரண்டுமா ?

உ. ஆரியப்படலம், சாதவாகனம், கலைக்கோட்டுத்தண்டு என்னும் நூல்களின் விபரம் எம்மட்டில்அறியப்படுகின்றது. கலைக்கோட்டுத்தண்டு என்னும்பெயர் எக்காரணமும்பற்றியதன்றெனற்கு வேறு எவ்வகையாதரவாவதுண்டா ?

ங. அங்காத்தல்செய்வது (அங்காப்பது) அண்ணம் எனப்படும் மேல்வாயின்றொழிலா ? அன்றிக் கீழ்வாயின்றொழிலா?

ச. உயிர்மெய் மயக்கள வின்றே. உயிர், மெய்ம்மயக்களவின்றே. என்ற பாடங்களுள் பொருந்துவதெது ? அதன்பொருள் என்னை ?

ரு. எழுத்து என்ன ஆகுபெயர் ?

சா. குரங்குமனம் அல்லது குரக்குமனம் என்னதொடர் ? கடிக்கமலம், கடிகமலம். என்னதொடர் ?

எ. 'அல்வழி இ ஐம்முன்னராயின்' — என்னும் சூத்திரத்துள் அஃறிணைப்பெயர்க்குமாத்திரம் விதியமைந்துகிடக்கின்றதா? அன்றி இருதிணைவினைக்கும் விதியமைந்துகிடக்கின்றதா ?

(தொடரும்.)

R. வேங்கடாசலம்பிள்ளை,

மோகனூர்.

---

அருண்மயம்.

தொல்காப்பியன்றுணை.

( செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதியது. )

# ஐயவினு ?

'இன்னிலை' என்ற நீதிநூல் ஒன்று பார்வையிட்டேன். அதில்வரும் 31-ம் பாட்டு "அளகு மனிகாகைப்பேண வணியா" என்ற அடியை முதலாக உடைய ஒருவெண்பாவாகும். அந்நூல் உரைகாரர் ஸ்ரீ. வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் 'அளகு' என்றதற்குச் சேவல் என உரைகூறியுள்ளார்கள். தொல்காப்பியமரபியல் 55-ம் சூத்திரத்தில் 'அளகு'- என்னும் சொல், பெண்பாற்பெயராக எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. 'சேவல்'-ஆண்பாற்பெயரன்றோ ? ஆகவே 'அளகு' என்றற்குச் 'சேவல்' என்று கூறும்வழக்கம் உண்டா என்பது ஐயம். சொற்பொருள் உணர்ந்தபெரியார் இவ்வையங்களையுமாறு வேண்டுகின்றேன்.

தமிழ்மாணவன்.

ஸ்ரீ:

அருள்மயம்

தொல்காப்பியன் துணை

# பெருவல்லம் ஓர் நாற்பெயராமா?

---

'எழுதினான் ஓலைபழுது' என்றதற்குத் தெளிவுரைகண்டு உணர்த்திய பெரியார்செந்தமிழ்க்குப் பொருளுரையெழுதவேண்டியதற்காக இஃதொன்று எழுதப்பட்டது. ஊர்க்கல் ஏனைய பத்திரிகையொப்ப உண்டெனின்இளம்பூரணபேராசிரியநச்சினார்க்கினியர்-தந்தி-ஆராய்ச்சிகள் தொடர்ந்துவரும்.

முன்னுரை. திருவருளைமுன்னிட்டு இவ்வுலகில்வழங்கிவரும் மொழிகள்பல. மொழி—பாஷை. அவற்றுள் பிறமொழியின் துணையின்றித் தாமே தம்மாற்றலால் விளக்கமுற்றுநின்று நிலவும்மொழிகள் சில. அவற்றுள்ளே தமிழ்மொழியும் ஒன்று. இம்மொழி வேங்கட முதலாகக் குமரியீறாக வழங்கிவருவது. 'வடவேங்கடந்தென்குமரியாயிடைத் தமிழ்கூறுநல்லுலகம்' என்பது பனம்பாரனார்கூற்று. இத் தமிழ்மொழியுடன் ஏனைப்பலமொழிகளையும் நன்கறிந்தபண்டிதர் ஒருவர் 'மொழிகள் நின்றுநிலவற்கு எழுத்துகள்இன்றியமையாதன' என்கின்றார். எழுத்து ஏற்படாது வழங்கிவந்த சிலமொழிகள் நாளடைவே மறைந்தமை உண்மையான் அவர்கூற்றுப் பெரிதும் ஒக்கும்.

சொல்:—எழுத்தான் ஆக்கப்பட்டதுசொல். சொல்லால் உணரப்படுவது பொருள். பொருட்கு உறைவிடம் சொல் என்க. அச்சொல்லாவது கேட்போன் ஒருபொருளைத் தன் உள்ளத்தேநினைத்து உணரும்படி தெரிவிக்கும் ஆற்றல்வாய்ந்த எழுத்தொலியே. அவ்வாற்றல் பொருளுக்கும் சொல்லாகியதனக்கும் உள்ள தொடர்பு. 'இச்சொற்கொண்டு இப்பொருள் அறிக' என்னும் இறைவன்கட்டளையே ஆற்றல் எனக்கூறுவாரும் உண்டு. கட்டளை-நியமம். "சொல்என்பது எழுத்தொடுபுணர்ந்து பொருள்அறிவுறுக்கும் ஓசை" என்கின்றனர் தொன்னூலுரையாசிரியர் ஒருவர். எழுத்தொலிகள் சொல்லை ஆக்கிப் பொருளறிவுறுத்தற்கு உதாரணம்:

‘தொல்காப்பியம்’ என்ற ஏழெழுத்துச்சொல்லைக்கூறுங்கால் ‘தொ’ என்ற முதலெழுத்தொலி முன்னர்க் கேட்போன் உள்ளத்தே சேற, ல் என்ற அடுத்த எழுத்தொலியும் பின்னர்க்,-கா-ப்-பி-ய-ம்- என்ற எழுத்தொலிகளும் முறையே ஒவ்வொன்றாகக் கூறுவோன் வாயிலாக மற்றவன்உள்ளத்தேசென்று பதியக் கேட்போன்கருத்தில் அவ்வேழும் ஓர்தொடராய்நிலைபெற்றுக் குறித்திடுஞ்சொல்லை ஆக்கிப் பொருளை அறிவுறுத்தியது என்பது.

இனிக், குறித்தபொருளை உள்ளவாறு தெரிவிப்பன ஆற்றல் வாய்ந்த சொற்களே. தமிழ்மொழியிலே அத்தகையசொற்கள் நிரம்பி யுள்ளன. ‘எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே’ என்பது ஓர் பெரியார்கட்டுரையாகலான் அவையாவும் பொருள்குறித்து எழுந் தனவே. அங்ஙனம் பொருள்குறிப்புழி அவை குறிப்பாகக்காட்டு வனவும் வெளிப்படையாகக்காட்டுவனவும் என இருதிறத்தனவாகி அமையும். (முன்னூலார் “தெரிபுவேறுநிலையல்” என்றதைப் பின் னூலார் “வெளிப்படை” என்று கூறிவிளக்கினர்.) அவ்விரண்டனுள் குறிப்பாகப்பொருள் உணர்த்தும் சொற்கள் கற்றுணர்ந்த பெரியோரா லேயே எடுத்தாளப்படும். வெளிப்படைச்சொற்கள்யாவர்க்கும்பொது. ‘ஆறுமுகம்’ என்ற சொல்லை ஓர் அறிஞர்—

‘ஐந்தின்முன் ஆவதென்ன ஆனனத்தின்பேர்என்ன’ என்று ஓர் வெண்பாவின் முதலடியில் குறிப்பிடுகின்றார். இவ்வடியிற்கண்டவை,

‘ஐந்தின்முன் ஆவதுஎன்ன’?—ஆறு:

‘ஆனனத்தின் பேர் என்ன’?—முகம்:

என்பன. ஆக, ஆறுமுகம் என்பது. தோன்றியவாறு காண்க. ஆனனம்—வடசொல்.

இவ்வாறு அமைந்த சொற்கள் குறிப்பின்பாற்படும். இனி இக் குறிப்புச்சொற்கள் பொருள்தெரிக்கும் இயல் பல்வேறுதிறத்தன வாகும். எத்திறமாயினும் இச்சொல்லைப்பெய்து இயற்றும் பாட்டு களில் ஆக்கியோன் உட்கிடை அறிய ஆறு உண்டு. ஆறு அறிந்தார் அறிஞர் என்ப. அவ்வாறும் அப்பாட்டிற் கிடப்பதே.

எழுவாயில் ஆசிரியர் இளம்பூரணவடிகள் தொல்காப்பியச் செய் யுளியல் 118-ம் சூத்திர-(‘நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே’)

உரைமேற்கோளாகக் குறிப்புச் சொற்களால் பொருளறியக்கிடக்குமாறுள்ள பாட்டொன்றினைக்காட்டியுள்ளார். அடுத்து அப்பாட்டினையே யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியரும் யாப்பருங்கலச்செய்யுளியல் 9-ம் சூத்திர ('பாதம் பலவரிற்பஃறொடை') உரைமேற்கோளாகஎடுத்தாண்டிருக்கின்றனர். பிறிதோரிடத்தும் அப்பாட்டுவருவது உண்டு. [அப்பாட்டினைப்பற்றிச் சிலநண்பர்க்கும் சமஸ்தான வித்வானாகியுள்ளார்ஒருவர்க்கும் எழுதியதில் ஒருபோக்காக எழுதிஅனுப்பிய முறையில் திருப்பி வந்தனத்துடன் அனுப்பினர்.]

அப்பாட்டினுக்கு நான் கண்டபொருள் பின்னே குறிக்கப்பட்டுளது. இறைவன் ஒழிந்த ஏனையர் முற்றறிவுபெற்றிலர் என்பது இப்பொருளுரை நோக்குவார்க்கும் கொள்கையாயிருப்பின் அது சால்புடைத்தாகும். நிற்க.

அப்பாட்டு வருமாறு:—

சிற்றியாறு பாய்ந்தாடுஞ் சேயரி யுண்கண்ணாய்
வற்றா வளவயலும் வாய்மாண்ட வேரியும்
பற்றார்ப் பிணிக்கும் மதிலும் படுகிடங்கு
மொப்ப வுடைத்தா யொளியோவா நீர்ப்புட்க
டத்தி யிரைதேடுந் தையலாய் நின்னூர்ப்-பே
ரொத்துணரும் வண்ண முரைத்தி யெனக்கூறக்
கட்டலர் தாமரையு ளேழுங் கவிமான்றேர்க்
கத்திருவ ரைவருங் காயா மரமொன்றும்
p. பெற்றவழி தேர்ந்துண்ணும் பேயி னிருதலையும்
வித்தாத நெல்லி னிறுதியும் பெற்றக்கா
லொத்தியைந்த தெம்மூர்ப் பெயரென்றாள் வான-வன்கை
விற்பொறித்த வேற்புருவத் தாள்.

p. - 'பெற்றவள்தேர்ந்துண்ணுதபேயினி'-(யா-வி-பாடம்) என்பது. இது பன்னிரண்டடியான்வந்த இன்னிசைப் பஃறொடைவெண்பாவாதல் யாவரும் அறிந்தபடியே.

மாட்டு:—சேயரியுண்கண்ணாய், தையலாய், நின்னூர்ப்பேர்உரைத்தி எனக்கூற, ஏழும், ஐவரும், ஒன்றும், இருதலையும், இறுதியும், பெற்றக்கால் இயைந்தது, என்றாள் புருவத்தாள், எனக்கூட்டி முடித்துக் கொள்க.

பொருள்:—ஏழு—பகரத்தில் ஏழாவதுஎழுத்து—பே
ஐவர்—ரகரத்தில் ஐந்தாவது————ரு
ஒன்று—வகரத்தில் முதலாவது———வ
இருதலை:-லகரத்தில்ஒருதலை— }—ல்
ஷை மற்றோர்தலை— }—ல
இறுதி—மகரத்தில் இறுதி— ———ம்
ஒத்துஇயைந்தவாறு:—'பேருவல்லம்'—என்பது.

ஆக ஷை பாட்டிற்கண்ட பெயர் 'பேருவல்லம்' என்னும் ஓர் ஊரைப்பற்றியது ஆகும். இவ்வூர் தஞ்சைநகரத்தை அடுத்துள்ளது.

இவ்வூரையே யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியர் எடுத்துக் காட்டி—"இருபன்னீரடியாற் பெருவல்லத்தைச்சொன்ன பஃறொடை வெண்பா"—என்றனர். ஆகவே இப்பெருவல்லம்-ஓர் நூலின்பெயராகக்கொள்வது எப்படி? நூற்பெயரேனக்கொண்டு குறித்திருக்கின்றவர் இருவர். ஒருவர் காலஞ்சென்ற சேஷகிரி சாஸ்திரியார். மற்றவர் தற்காலத்துள்ள ஓர் அறிஞர்.

(Vide-Page-116-L-Report on a Search for Sanskrit and Tamil M. S. S. No-2. & யாப்பருங்கலவிருத்தி முதற்பாகம்- பதிப்புரையினை அடுத்த ஆராய்ச்சியுரையுள். 9 (IX)-ம்பக்கம்.)

தச்சநல்லூர் }
6—1—18 } பெயர்விழையான்.

---

# * மதுரைத்தமிழ்ச்சங்கவாழ்த்து.

————:o:————

பூவாரம் புலர்ந்திடுமோல் பொன்ஆர
மோதிருட்டுப் போமால், ஏனை
மாவாரங்களுக்குமொவ்வோர் மாசேனும்
உண்மையினுல் மருமிக் கார்ந்த
தேவாரந் திகழ்மொழியில் மாவாரத்
துடனீங்கு சேர்ந்தோர் யார்க்கும்
பாவாரம் புனைகின்றேன் பழுதேதும்
இதற்கிலையாம் பான்மை ஓர்ந்தே.

---

* இவை திருநெல்வேலியிற்கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 16-வது வருஷ மகோத்ஸவகாலத்திற் கூறியவை.

## அக்கிராஸநர்வாழ்த்து.

"நீயேஇங் (கு)உறுக"என ராஜரா
ஜேச்வரனே நிகழ்த்தி னுனல்
போயேசேர் வோமென்னச் சர்வகலா
சபைத்தலைமை பூண்ட நல்லோய்!
தாயேபோல் தமிழ்தாங்கும் ஆன்ரபிள் ஸர்
பி. எஸ். சிவ சாமி ஐயர்
பீ.யே.பி. எல்.கே.ஸி. எஸ்.ஐ.நீ
இங்குற்றுய் பிறங்கி வாழி!

மகத்துவமே மிகுத்ததமிழ் வளர்த்துலகு
தழைத்திலக மறையோ னும்ஓர்
அகத்தியன்அன் றொருபழமா நேரியினில்
உரைதெளித்தான் அல்லன். என்னே!
மகத்துவமே மிகுத்ததமிழ் வளர்த்துலகு
தழைத்திலக மறையோ னும்இவ்
* அகத்தியன்இன் றொருபழமா நேரியினில்
உரைதெளித்த தருமை யன்றே?

சந்திரசே கரப்பெருமான் இறையவனு
முன்காத்த சங்கம் போன்றிங் (கு)
இந்திரனேர் திருவுடைநம் இராஜரா
ஜேச்வரப்பேர் இறைவன் காக்கும்
செந்தமிழ்நற் சங்கத்தின் ஈரெட்டாண்
டுத்ஸவத்தைச் செகத்தோர் போற்றும்
சுந்தரஞ்சேர் நெல்வேலித் தலமதனில்
இயற்றுவித்த தூயோ ராகும்,

மன்னுபுகழ் என்.ஏ.வி சோமசுந்
தரம் எஸ்.பால் வண்ணன் சீர்சால்
நன்னயனும் எஸ்.சோம சுந்தரபா
ரதியாதி நல்லோர் யாரும்
பன்னருஞ்சீ ரொடுதழைக்க, நெல்வேலிப்
பதிதழைக்க; பாரோர் போற்றும்
தன்னிகரில் நம்மதுரைத் தமிழ்ச்சங்கம்
தழைக்க; முதல் தழைக்க மாதோ.

ம. கோபாலகிருஷ்ணையர்,

மதுரை மாணவர்செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராஸநாதிபதி.

---

* அகத்தியன் = இன்றியமையாதவன்.

# புத்தகமதிப்புரை.

---

1. மனோரஞ்சனி:—இது மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்பகுதி வெளிவந்திருக்கிறது. அதிற் கடவுள்வாழ்த்து, மனோரஞ்சனி, செந்தமிழ்ப்பாஷையுந் தேவ பாஷையே, மனோசக்தி, பெற்றோரைப்பேணல், மாணவர் ஸ்திரீகள் பக்கம், சுகாங்கி என்னும் விஷயங்கள்வந்துள்ளன. இதன் வருடச் சந்தா ரூ 2. வெளிநாடுகளுக்கு ரூ 2—8—0. தனிப்பிரதி அணா 3. வேண்டுவோர் மனோரஞ்சனி ஆபீஸ், காரைக்குடி என்ற விலாசத் துக்கெழுதிப்பெறலாம்.

---

2. தமிழர்நேசன்:— இது சென்னையினின்றும் வெளிவரத்தொடங்கிய மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. இதன் முதற்பகுதி வந்துள்ளது. இதிற் பொதுவாக அறிவுவளர்ச்சிக்குரிய பல விஷயங்களும் வெளியிடப்பெறுமென்று தோன்றுகிறது. இதன் வருடச்சந்தா ரூ 3. தனிப்பிரதி அணா 8. வேண்டுவோர் சென்னை எறபாலுசெட்டித்தெரு, நெ-23-கட்டிடத்தில் தமிழர் கல்விச்சங்கத்தின் காரியதரிசி என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

3. கம்பராமாயணம் (சுருக்கம்) பாலகாண்டம்:—இது, புதுச்சேரி ஸ்ரீமான், வ. வெ. ஸுப்ரம்ஹண்ய அய்யர் அவர்களால் பால காண்டத்துள் ஆராய்ந்தெடுத்த 545-செய்யுளால் தொகுக்கப்பெற்றிருக்கிறது. இதில் சென்னை பெரியநியாயஸ்தலநியாயாதிபதி கனம் ஸ்ரீ. தி. வெ. சேஷகிரி அய்யரவர்கள் ஆங்கிலத்திலெழுதிய முன்னுரையும், அதற்குத்தமிழ்மொழிபெயர்ப்பும், ஸ்ரீ, வ. வெ. ஸுப்ரம்ஹண்ய அய்யரவர்கள் எழுதிய விரிவானமுகவுரையும், பாடபேதங்கள், அரும்பொருள்விளக்கம், சில இலக்கணக்குறிப்புகள், பதப்பிரிவினை விளக்கம், அருஞ்சொல் அகராதி என்னுமிவைகளும் முன்னும்பின்னும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்விலை ரூபா 2. துணிக்கட்டடம் ரூபா 2—6—0. வேண்டுவோர் வ. வெ. ஸுப்ரம்ஹண்யஅய்யர், கம்பநிலயம், புதுச்சேரி; என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

---

ப—ர்.

நாட்டரசங்கோட்டை.
வித்தியாபரிபாலனசங்கம்.

உபந்யாஸம் நெ. 7.

பிங்களஹு ஐப்பசிமீ 30உ (15-11-17.) மாலை 5-மணிக்கு சிவகங்கை வக்கீல் பிர்ம்மஸ்ரீ P. S. இராமஸாமி ஐயரவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். சிவகங்கை ஸாமவேதம் பிர்ம்மஸ்ரீ சுந்தர சாஸ்திரிகள் "தர்மம்" என்ற விஷயத்தை உபந்நியாஸித்தார்கள். பிறகு ப. ஸ்ரீ. உ. வே. இராமையங்காரவர்கள் ஸ்ரீமான், உ. வே. சீதாராமையங்காரவர்கள், ஸ்ரீமான் சுப. வெள்ளைவாரணம்பிள்ளையவர்கள் மேற்கண்ட உபந்நியாஸத்தையனுசரித்தே உபந்நியாஸித்தார்கள். பிறகு "ஆறுவதுசினம்" என்ற விஷயத்தை சிவி. லெ. சிவசுப்பிரமணியன் சிவி. பெரி. ராமஸாமி என்ற மாணவர்கள் நன்கு உபந்நியாஸித்தார்கள். பிறகு அக்கிராஸனாதிபதியவர்கள் உபந்நியஸித்தவிஷயத்தையும், உபந்நியாஸகர்களையும் புகழ்ந்தும்,மாணவர்கள் இம்மாதிரி உபந்நியஸிப்பது வித்தை முன்னேற்றமடையும்வழியென்றும் தமது நல்லபிப்பிராயத்தை வெளிக்காட்டிப்பேசினார்கள். இரவு 9-மணியோடு சங்கம் சிறப்பாய் நிகழ்ந்தது.

ஸ்ரீ. இராமையங்கார்.